03.11.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## விவசாயிகள் இனி அலைய வேண்டாம்! ஒரே இடத்தில் வேளாண் அலுவலகங்கள்

வேளாண் துறையின் அனைத்து அலுவலகங்களும், ஒரே இடத்தில் இருக்கும் வகையில், ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் கட்டப்பட உள்ளது. வேளாண்துறையில் பல பிரிவுகள் உள்ளன. இவற்றுக்கு, மாநிலம் முழுவதும் வட்டார அளவில், தனித்தனி இடங்களில் அலுவலகங்கள் உள்ளன. இதனால், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், சாகுபடிக்கான உதவிகள் கிடைப்பதில்லை; தேவையற்ற அலைச்சல் ஏற்படுகிறது. அதனால், இந்த அலுவலகங்கள் எல்லாம் ஒரே இடத்தில் செயல்படும் வகையில், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைக்க, தமிழக அரசு திட்டம் வகுத்துள்ளது. இதற்காக, ஒவ்வொரு வட்டாரத்திலும், பொதுப்பணித் துறை மூலம், கட்டடங்கள் கட்டப்படும். முதல் கட்டமாக, நான்கு மாவட்டங்களில் உள்ள எட்டு இடங்களில், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய கட்டடம் கட்டும் பணி துவங்க உள்ளது.

| கட்டடம் அமைய உள்ள இடங்கள் | |
|---|---|
| இடம் | தொகை (ரூபாய் கோடியில்) |
| **திருவண்ணாமலை மாவட்டம்** | |
| *மேற்கு ஆரணி* | 1.23 |
| **வேலூர் மாவட்டம்** | |
| *அரக்கோணம்* | 1.24 |
| *நாட்றாம்பள்ளி* | 1.26 |
| *காவேரிபாக்கம்* | 1.25 |
| **கடலூர் மாவட்டம்** | |
| *பண்ருட்டி* | 1.24 |
| *கம்மாபுரம்* | 1.25 |
| **விழுப்புரம் மாவட்டம்** | |
| *தியாக துருகம்* | 1.24 |
| *சின்ன சேலம்* | 1.27 |

இதுகுறித்து, பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களில், வேளாண்துறை அலுவலகங்கள் மட்டுமின்றி, விவசாயிகளுக்கான கருத்தரங்க கூடம், விற்பனை கூடமும் அமைய உள்ளது. ஏழு மாதங்களில், இந்த கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்; கட்டுமானப்பணி இந்த மாதம் துவங்கும்.இவ்வாறு அவர் கூறினார்.- நமது நிருபர் --

**வேளாண் துறையில் உள்ள பிரிவுகள்**

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, விதைசான்று மற்றும் அங்கக சான்று, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்.

## பெரியாறு அணை நீர்மட்டம் மூன்று நாளில் 4 அடி உயர்வு

கூடலூர்,"பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் அணையின் நீர்மட்டம், கடந்த 3 தினங்களில் 4 அடி உயர்ந்து நேற்று மாலை 125 அடியை எட்டியது. கடந்த சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால்

அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்வரத்து 4410 கன அடியாக இருந்தது. கடந்த அக்., 31ல் 120.90 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 4 அடி உயர்ந்து 125 அடியை எட்டியது. அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு 411 கன அடி நீர் திறந்து விடப்பட்டுஉள்ளது. நீர் இருப்பு 3519 மில்லியன் கன அடியாகும்.தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

## அரபிக் கடலை நோக்கி செல்லும் காற்று

சென்னை: 'தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்று பரவலாக மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இது குறித்து, வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:லட்சத் தீவு அருகே நிலை கொண்டிருந்த காற்று மேலடுக்கு சுழற்சி, அரபிக் கடலை நோக்கி நகர்கிறது. இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று கன மழை பெய்யலாம். சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில், மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## காயான மல்லிகைப்பூ



திருப்புத்துார் :திருப்புத்துார் அருகே வையகளத்துாரில் மல்லிகைப்பூச் செடியில் கருப்பு காய் காய்த்தது. சிவகங்கை மாவட்டம் திருப்புத்துார் அருகே வையகளத்துாரைச் சேர்ந்தவர் வன்னியப்பெருமாள்.55. இவரது விவசாயத் தோட்டத்தில்,வீட்டு உபயோகத்திற்காக மல்லிகைச் செடி வளர்க்கிறார். அதில் ஒரு செடியில் பூத்திருந்த மல்லிகைப் பூ, காயாக மாறியுள்ளது.

கருப்பு நிறத்தில், சிறிய சுண்டைக்காய் போன்று அது காணப்பட்டது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அழகுமலையிடம் கேட்கையில், ' இது அபூர்வமானதே. இது 'மரபணு திடீர் மாற்றம்' என்ற வகையில் மல்லிகைப் பூ, காயாக மாறியிருக்கலாம்' என்றார்.

## சோத்துப்பாறை அணை நிரம்பி வழிகிறது



பெரியகுளம், தேனி மாவட்டம் பெரியகுளத்தில் இருந்து 8 கி.மீ., தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சோத்துப்பாறை அணை உள்ளது. மொத்த உயரம் 126 அடியாக உள்ள இந்த அணையின் நீர்மட்டம், கடந்த அக்.,31ல் 113 அடியாக இருந்தது. இப்பகுதியில் நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையால், சோத்துப்பாறை அணை நீர்மட்டம் ஒரே நாளில் 10 அடி உயர்ந்து, 123 அடியை

எட்டியது.அணைக்கு தொடர்ந்து நீர் வரத்து இருந்ததால், நேற்று நீர்மட்டம் 126 அடியை கடந்து, மறுகால் பாய்கிறது. அணைக்கு வரும் 125 கனஅடி நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. இந்த ஆணையின் மூலம் புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள 1,040 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்றுபெறும்.

**ராமநாதபுரத்தில் அரிதான மூலிகைகள்: தொல்லியல் ஆய்வில் தகவல்**



ராமநாதபுரம் :ராமநாதபுரத்தில் தொன்மை பகுதிகளில் அரிதான மூலிகை செடிகள் காணப்படுவது தொல்லியல் ஆய்வாளர்கள் ஆய்வில் தெரியவந்துள்ளது.ராமநாதபுரம் களத்தாவூர் 13,14 ம் நுாற்றாண்டில் சிறந்து விளங்கியுள்ளது. அங்கு பானை ஓடுகள், சீன போர்சலின் ஓடுகள் போன்றவை இதற்கு ஆதாரமாக உள்ளன. இங்கு கண்மாய் கரையில் சங்கஞ்செடி மூலிகை காணப்படுகிறது. இந்த மூலிகை முட்சங்கான், இசங்கு, உவரிச்சங்கம் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இதன் மலர்கள் வெண்ணிறம் உடையது. பூங்கொத்தாக பூக்கும். இவற்றின் இலைகள் சிரங்கு, சொறி, புண், கொப்பளம் குணமாக பயன்படும். இலைகளைகுடிநீரில் போட்டு குடித்தால் வாதநோய் குணமாகும். பழம் உப்பு சுவையுடையது. உத்தரகோசமங்கை கீழச் சீத்தை என்ற பகுதி 2,300 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க காலத்தை சேர்ந்த ஊர். இப்பகுதி கி.மு.300 முதல் கி.பி. 1,200 வரை புகழ் பெற்று விளங்கியுள்ளது. இந்த பகுதியில் கொக்கிமுள் ஆதண்டை காணப்படுகிறது. இலைகள் முட்டை

போன்ற வடிவத்தில் இருக்கும். காய்கள் கோளவடிவத்தில் பச்சை நிறத்தில் இருக்கும். இத்தாவரம் புதர்போல் வளர்ந்து கொடிபோல் படரும். இவை கருஞ்சூரை, காட்டுக்கத்தரி, கரிந்து போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. இதன் வேர்கள் இருமல், பாம்புக்கடிக்கு மருந்தாக உள்ளது. இலைகள் நீரிழிவு நோய், கண்பார்வை குறைவு போன்ற நோய்களை குணமாக்கும்.

அழுக்குநீக்கி

நரிப்பையூர் பிழைபொறுத்தமன் குடியிருப்பு 12 ம் நூற்றாண்டு பாண்டியர்காலத்தில் சிறந்து விளங்கியுள்ளது. இதற்கு ஆதாரமாக காளி சிலை உள்ளது. இங்கு மலைப்பகுதிகளில் மட்டும் காணப்படும் மணிப்பூவந்தி மரம் உள்ளது. பூவந்தி மரம், பூந்திக்கொட்டை மரம், சோப்புக்காய் மரம் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. இலைகள் நீள்வட்டவடிவத்தில் இருக்கும். பூக்கள் கொத்துக்களாக பூக்கும். வெண்ணிற மலர்கள் இருக்கும். காய்கள் முட்டை அல்லது கோள வடிவில் இருக்கும். இதன் பழங்களை உலர்த்தி, அரைத்து தலையில் தேய்த்தால் அழுக்கு, பொடுகு அறவே நீங்கிவிடும். இவற்றின் கொட்டைகளை பல ஆயிரம்

ஆண்டுகளாக அழுக்கு நீக்கியாக மக்கள் பயன்படுத்தி உள்ளனர்.இவற்றை ஆய்வு செய்த தொல்லியல் ஆய்வாளர் வே.ராஜகுரு கூறியதாவது: சங்கஞ்செடி, கொக்கிமுள் ஆதண்டை, மணிப்பூவந்தி ஆகிய மூலிகைகள் அரிதானவை.

இவை ராமநாதபுரத்தில் தொன்மையான பகுதிகளில் மட்டும் காணப்படுவது ஆச்சரியமாக உள்ளது. இதன்மூலம் பழங்கால தமிழர்கள் மூலிகை மருத்துவத்தில் சிறந்து விளங்கியது தெரியவந்துள்ளது, என்றார்.

## பசுமைக்கு வித்திட்ட பருவமழை

விருதுநகர்:மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் விவசாயிகள் நம்பிக்கையுடன் விவசாயப்பணிகளில்

ஈடுபட்டுள்ளனர்.வானம் பார்த்த பூமியானவிருது நகர்மாவட்டம் முற்றிலும் விவசாயத்தை நம்பியே உள்ளது. மாவட்டத்தில் ஆண்டுதோறும் பெய்ய வேண்டிய சராசரி மழையளவு 801.22 மி.மீ., ஆனால் கடந்த சில ஆண்டுகளாக வடகிழக்கு பருவமழை சரிவார பெய்யாமல் கண்ணாமூச்சி காட்டிவருவதால் நகைகளை வங்கியில் அடமானம் வைத்து கடன்பெற்று பயிர்செய்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

அணைகள்

2012ல் சராசரியைவிட மிக்குறைவாக அதாவது 563.62 மி.மீ., மட்டுமே பெய்ததால் கடும் வறட்சி ஏற்பட்டது.தற்போதைய மழையால் மாவட்டத்தின் மிகப்பெரிய அணையான பிளவக்கல் பெரியாறு அணை முழு உயரமான 48 அடியில் 44 அடியை எட்டிஉள்ளது. ராஜபாளையம் அருகே சேத்தூர் சாஸ்தாகோயில் அணை நிறைந்து விட்டது.

புஞ்சை விவசாயம்

மாவட்டத்தின் மேற்குப்பகுதிகளான தேவதானம், சேத்தூர், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு பகுதிகளில் நஞ்சை, அருப்புக்கோட்டை, காரியாபட்டி, விருதுநகர், சிவகாசி உட்பட கிழக்கு பகுதிகளில் புஞ்சை விவசாயம் நடக்கிறது. இதில் கிழக்குப்பகுதியில் அனைத்தும் வானம் பார்த்த நிலங்களாக உள்ளதால் மழை பெய்யும் காலங்களில் மட்டுமே விவசாயம் நடைபெறும். தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் அதை நம்பி கிழக்குப்பகுதி விவசாயிகளும் விவசாயத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

நெல் விவசாயம் மேற்குபகுதியில் நஞ்சை பயிர்களான நெல், வாழை, கரும்பு, தென்னை போன்ற விவசாயம் நடைபெறுகிறது.

இங்கு தற்போது மழை பெய்வது நெல்நடவுக்கு ஏற்ற காலமாக உள்ளதால் நெல் விவசாயிகள் உழவு, நடவு உள்ளிட்ட

விவசாயப்பணிகளில் விவசாயிகள் தீவிரமாக களமிறங்கி உள்ளனர். மாவட்டத்தில் பருவமழை அவ்வப்போது பெய்து வந்தாலும் நெல் விவசாயத்திற்கு இது போதுமானதாக இல்லை. நாற்றுகள் வாடாமல் இருக்க உதவியாக உள்ளது.

இரண்டு பருவங்கள்

விவசாய பயிர்சாகுபடியில் அக்., 1 முதல் மார்ச் 31 வரை வடகிழக்கு பருவமழை காலத்தையொட்டி "ராபி' பருவம், ஏப்.,1 முதல் செப்.,30 வரை தென்மேற்கு பருவமழை காலத்தையொட்டி காரிப் பருவம் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் வடகிழக்கு பருவமழைதான் விவசாயத்திற்கு பெருமளவு கைகொடுக்கும். மாவட்டத்தின் மொத்த விவசாய பரப்பு 1,14,172.348 எக்டேர். இரண்டு பருவங்களிலும் பயிர் சாகுபடி செய்தால் இதன் பரப்பு அதிகரிக்கும்.

அதிக சாகுபடிக்கு வாய்ப்பு

மாவட்டத்தில் கடந்தமாதம் வெப்பச்சலனம் காரணமாக தொடர் மழை பெய்தநிலையில் வடகிழக்கு பருவமழையும் கடந்த சிலநாட்களுக்கு முன் துவங்கி தொடர்ந்து பெய்து வருவதால்

இந்தாண்டு சாகுபடி அதிகமாக இருக்கும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

54,000 எக்டேரில் சாகுபடி

மாவட்டத்தில் ஏப்ரல் முதல் அக்.,30 வரை 7,000 எக்டேரில் நெல், 27,000 எக்டேரில் சிறுதானியம், தலா 7,000 எக்டேரில் பயறுவகைகள் ,பருத்தி, எண்ணெய் வித்துக்கள் என 54,000 எக்டேர் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1,15,860 எக்டேர் இலக்கு

மாவட்டத்தில் இந்தாண்டு 31,000 எக்டேரில் நெல், 51,800 எக்டேரில் சிறுதானியங்கள், 12,220 எக்டேரில் பயறு வகைகள், 10,000 எக்டேரில் பருத்தி, 3,000 எக்டேரில் கரும்பு, 7,840 எக்டேரில் எண்ணெய் வித்துக்கள் என 1,15,860 எக்டேர் பயிர் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இயற்கையின் வரப்பிரசாதம்

விஜயமுருகன்(தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்): கடந்த சில ஆண்டுகளாக ஏமாற்றிய வடகிழக்கு பருவமழை இந்தாண்டு சரியான நேரத்தில் துவங்கி உள்ளது. இயற்கையின் வரப்பிரசாதமான அதை மகிழ்வோடு வரவேற்கிறோம். விவசாயிகளுக்கு தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்து, உபகரணங்கள் உள்ளிட்டவற்றையும், மானியங்களையும் அரசு, மாவட்ட நிர்வாகம் முழு அளவில் வழங்க வேண்டும். இதன் மூலம் நம்பிக்கையுடன் பயிர்சாகுபடி செய்து அதன் பரப்பு நிச்சயம் அதிகரிக்கும் என நம்புகிறோம்.

தாமதமானாலும் நல்லதே

முருகேசன்(தமிழக விவசாயிகள் சங்க ராஜபாளையம் நகர் செயலாளர்):ராஜபாளையத்தில் உள்ள கண்மாய்கள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையை நம்பி உள்ளன. கடந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் மக்காச்சோளம், கரும்பு, பயறு வகை பயிரிட்டவர்கள் சிரமப்பட்டனர். குறைந்த உற்பத்தியை கரும்பு விவசாயிகளுக்கு கிடைத்தது. இதனால் பலர் நஷ்டத்தை சந்தித்தனர்.

தற்போதைய மழை தாமதமாக பெய்தாலும் மக்காச்சோளம், கரும்பு, தென்னை, பயறு வகை பயிரிட்டவர்களுக்கு நல்லது. தொடர் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் நெல் நடவு பணி நடந்து வருகின்றனர். தற்போதைய மழையால் கண்மாய்களில் முழு அளவில் தண்ணீர்

தேங்கவில்லை. தொடர்ந்து மழை பெய்தால் தான் கண்மாய் நிரம்பும், கடைமடை வரை தண்ணீர் செல்ல உதவும் .

மழைநீர் எட்டிப்பார்க்காத கண்மாய்கள்

மாவட்டத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் 290, ஒன்றிய பராமரிப்பில் 708 என 998 கண்மாய்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவற்றை மழைநீர் எட்டிக்கூட பார்க்கவில்லை. வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பு, சேதமே இதற்கு காரணம்.

இதனால் பாசன விவசாயிகளுக்கு பாதிப்புதான். 35,193 கிணறுகளும் விவசாய பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அவற்றிலும் தண்ணீர் மட்டம் பெருமளவு குறைந்து விட்டது.

அதனால் முழுக்க முழுக்க மழையை நம்பி மட்டுமே விவாசயம் உள்ளது.

அணைகளை திறக்கலாம்

பிரகலாதன் (விவசாயி, வத்திராயிருப்பு): கடந்த ஆண்டில் கோடைமழை நன்கு பெய்ததால் கண்மாய்களில் இருந்த நீரை வைத்து விவசாயம் செய்தோம். தற்போது கண்மாய்கள் காலியாக உள்ளன.

கிணறுகளிலும் நீர்ஊற்று கிடைக்கவில்லை. நீர்மட்டம் அதல பாதாளத்தில் உள்ளது. மழைநீரை நம்பி நெல் நடவு செய்துள்ளோம். மழையும் கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குறைவாகத்தான் பெய்துள்ளது.

இந்த மழை நேரத்தில் பிளவக்கல் அணைகளை திறந்துவிட்டால் பயிர்கள் உயிர்பெறும். நீரும் சேதாரமின்றி கண்மாய்களுக்கு சென்று சேரும்,' என்றார்.

## 2ம் கட்ட நீர்வள, நிலவள திட்டம்: ரூ.3,000 கோடி தருகிறது உலக வங்கி

தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட, இரண்டாம் கட்ட நீர்வள, நிலவள திட்டத்திற்கு, 3,000 கோடி ரூபாய் வழங்க, உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. பாசன வழித்தடங்களை மேம்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, 2007 முதல் தமிழகத்தில், நீர்வள, நிலவள திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்கு உலக வங்கி, 2,544 கோடி ரூபாய் கடனுதவி அளித்தது. பொதுப்பணி, வேளாண் உள்ளிட்ட, எட்டு துறைகள் ஒருங்கிணைந்து, இத்திட்டத்தை செயல்படுத்தின. இதனால், திருவண்ணாமலை, வேலுார் உட்பட, தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பல மாவட்டங்கள் பலன் அடைந்தன. இந்த மாவட்டங்களில், நீர்நிலைகளை புனரமைத்தல், நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை உருவாக்குதல், நீர்வழித்தடங்களை மேம்படுத்துதல் உட்பட, பல பணிகள் நடந்தன. ஜூனில் நிறைவு பெற்ற இத்திட்டத்தால், வேளாண் உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதையடுத்து, 'இரண்டாம் கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்' என, தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதற்காக, உலக வங்கியிடம், 3,000 கோடி ரூபாய் கடனுதவி பெற திட்டமிடப்பட்டு, அதற்கு, மத்திய அரசும் பரிந்துரை செய்தது. உலக வங்கியும் கடனுதவி வழங்க சம்மதித்துள்ளதால், திட்டத்தை செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகளை, பொதுப்பணித்துறை துவங்கியுள்ளது.இதுகுறித்து, நீர்வளத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: இரண்டாம் கட்ட நீர்வள, நிலவள திட்டத்திற்கு, உலக வங்கி வழங்க உள்ள நிதியை பயன்படுத்தி, என்னென்ன பணிகளை மேற்கொள்வது என்பது குறித்து, பொதுப்பணித்துறை அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது. உலக வங்கி வழங்கும் நிதியை பயன்படுத்தி, ஏற்கனவே விடுபட்ட பல திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவ

மழை முடிந்ததும், திட்ட பணிகள் வேகம் எடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்

**தேங்காய் எண்ணெயில் அளவுக்கதிகமாக கலப்படம் அமோகம்முதல்வரை சந்தித்து மனு அளிக்க முடிவு**

பொள்ளாச்சி: தேங்காய் எண்ணெயில், அதிகளவு கலப்படம் கலப்பதை தடுக்க வேண்டும்,' என தென்னை விவசாயிகள், தமிழக முதல்வரை சந்தித்து மனு அளிக்க முடிவு செய்துள்ளனர்.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில் தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. இப்பகுதியில் இருந்து உள்ளூர் மட்டுமின்றி, வெளியூர், வெளி மாநிலங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

போதிய லாபம் கிடைத்து வந்ததால், விவசாயிகள் தென்னை சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர். பொள்ளாச்சியிலிருந்து அதிகளவு காங்கேயம் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கொப்பரை, தேங்காய் எண்ணெய் ஆகியவை அங்கு கொண்டு சென்று விற்பனை செய்வது வழக்கமாகியுள்ளது. இந்நிலையில், கொப்பரை மற்றும் தேங்காய் விலை உயர்வு உச்சத்தை எட்டாமல் இருக்க, வியாபாரிகள் அவர்களுக்குள்,'சிண்டிகேட்' அமைத்து விலையை குறைத்தல்; கலப்படம் போன்ற செயல்களினால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

**'சிண்டிகேட்'**

'சிண்டிகேட்' அமைத்து வியாபாரிகள் கேட்கும் விலைக்கு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், போதிய லாபம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

எப்போதெல்லாம் விலை உயர்கிறதோ, அப்போதெல்லாம் வியாபாரிகள் 'சிண்டிகேட்' அமைத்து விலையை குறைக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால், பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தரப்பில் குற்றச்சாட்டு உள்ளது.

'சிண்டிகேட்' அமைத்து வியாபாரிகள், விலையை குறைக்கும் சம்பவம் ஒரு புறம் என்றால், மற்றொரு புறம் தேங்காய் எண்ணெயில் கலப்படம் தலை துாக்கியுள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதனால், விவசாயிகள், வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றனர்.

**கலப்படம் அமோகம்**

விவசாயிகள் கூறியதாவது: காங்கேயம் மார்க்கெட்டில், விற்பனைக்காக கொண்டு செல்லப்படும் தேங்காய் எண்ணெயில் அதிகளவு கலப்படம் செய்யப்படுகிறது. பெரிய அளவிலான ஆயில் நிறுவனங்கள், தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் போது, மில்லிலேயே, மலிவான விலையில் கிடைக்கும் எண்ணெய்களை கலக்கின்றனர். 50 சதவீதத்திற்கு மேலாக கலப்பதால், இதனை பயன் படுத்துவோர் சரும நோய் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை சந்திக்கும் சூழல் உள்ளது.

கலப்படம் குறைந்த அளவு காணப்பட்ட நிலையில், தற்போது, தீபாவளி பண்டிகையும் நெருங்குவதால், எண்ணெய் பயன்பாடு அதிகமாக இருக்கும் என்பதை மனதில் கொண்ட தேங்காய் எண்ணெய் நிறுவனங்கள் ஒன்றாக கைகோர்த்து, இதுபோன்ற செயலில் ஈடுபடுகின்றனர். இதனைக்கட்டுப்படுத்த வேண்டிய உணவு பாதுகாப்பு அலுவலர்களும் நடவடிக்கை எடுக்காததால், கொப்பரை, தேங்காய் எண்ணெய் உள்ளிட்டவையின் விலையில் குறைந்து வருகிறது.

பொள்ளாச்சியிலிருந்து கொண்டு செல்லப்படும் தேங்காய் தரமானதாக இருந்தாலும், இதுபோன்ற செயல்களினால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். 'சிண்டிகேட்' பிரச்னை, தேங்காய் எண்ணெயில்

கலப்படம் போன்றவற்றினால், தென்னை விவசாயிகள் கண்ணீர் வடிக்கும் சூழல் உள்ளது.

தென்னை விவசாயிகளின் துயர் துடைக்க, கலப்படத்தை கட்டுப்படுத்தவும், சிண்டிகேட் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க தமிழக முதல்வரை நேரிடையாக சந்தித்து மனு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**விலையும் குறைந்தது**

கொப்பரை மற்றும் தேங்காய் எண்ணெய் விலையும் காங்கேயம் மார்க்கெட்டில் சரிந்துள்ளது. முதல் தர கொப்பரை கிலோ - 68-69 ரூபாய், இரண்டாம் தரம்- 66 ரூபாய், முதல் தர தேங்காய் (ஒரு டன்)- 20 ஆயிரத்து 500, இரண்டாம் தரம்- 19,000-19,500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. தேங்காய் எண்ணெய் ஒரு டின் 1,430 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் -1,400 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. சீசன் முடியும் நேரத்தில், விலை நன்றாக கிடைக்கும் என்றும்; பண்டிகை நெருங்குவதால், விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருந்த விவசாயிகளுக்கும் விலை குறைவு ஏமாற்றத்தினையே ஏற்படுத்தியுள்ளது.

**பாரம்பரியம், பசுமையை பாதுகாக்க பசுமை தீபாவளி! களமிறங்கும் மகளிர் குழுக்கள்**



கோவை : தீபாவளி பண்டிகைக்கு பாரம்பரிய இனிப்பு, காரம் சுவைத்து பல ஆண்டுகளாகி விட்டதா... கவலையை விடுங்கள், இந்த ஆண்டு தீபாவளிக்கு மகளிர் குழுக்கள் வாயிலாக, பாரம்பரிய இனிப்பு கடைகளை அமைத்து, பசுமை தீபாவளியை கொண்டாட, மாநகராட்சி நிர்வாகம் தயாராகி வருகிறது.

தீபாவளி பண்டிகைக்கு ஒரு மாதத்துக்கு முன்பே, வீடுகளில் பலகாரம் தயாரிக்கும் பணிகளில் பெண்கள் ஈடுபடுவர். குறிப்பாக, அதிரசம், தானிய உருண்டை (லட்டு) வகைகள், முறுக்கு, தட்டைவடை போன்றவை, முக்கிய அங்கம் வகிக்கும். வீட்டில் தயாரிக்கும் பலகாரங்களை அண்டை வீட்டாருக்கும், பண்டிகைக்கு வீட்டுக்கு வருவோருக்கும் பரிமாறி பண்டிகையை கோலாகலமாக கொண்டாடுவது வழக்கம்.

கால மாற்றத்தால், வீடுகளில் பலகாரம் தயாரிக்கும் கலாசாரம் மாறிவிட்டது. தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன்பாக, ஸ்வீட் ஸ்டால்களில், இனிப்பு, காரம் வகைகளை ஆர்டர் செய்து, தீபாவளிக்கு ஒரு நாள் முன்பாக, கடைகளில் முண்டியடித்து, அவற்றை பெறுகிறோம்.

பாரம்பரிய இனிப்பு, காரம் வகைகள் என்னவென்றால் என்ன என்று கேள்வி கேட்கும் நிலை உள்ளது. இயற்கையை மறந்து, மரங்களை வெட்டி வரும் நிலையில், பட்டாசு வெடிப்பதால் சுற்றுச்சூழல் முழுமையாக மாசுபட்டு வருகிறது.

இந்நிலையில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், பட்டாசு வெடிப்பதை தடுக்கவும், ஒலி, காற்று மாசில்லா தீபாவளி கொண்டாட, சுற்றுச்சூழல் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. மக்களிடமும் கொஞ்சம் கொஞ்சமாக மனமாற்றம் ஏற்பட்டு வரும் நிலையில், பாரம்பரிய இனிப்பு, காரம் வகைகளின் மோகமும் அதிகரித்து வருகிறது.

மக்களின் தேவையறிந்து, கோவை மாநகராட்சி நிர்வாகம், இந்தாண்டு பண்டிகைக்கு பசுமை தீபாவளி கடைகளை அமைக்கிறது. மாநகராட்சி பிரதான அலுவலகத்தில், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம், ஸ்டால்கள் அமைத்து, பாரம்பரிய இனிப்பு, காரம் வகைகள், அவர்களின் தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

மாநகராட்சி கமிஷனர் விஜய கார்த்திகேயன் கூறுகையில், "பாரம்பரிய இனிப்பு, காரம் வகைகளை மக்கள் தேடத்துவங்கியுள்ளனர். அதனால், மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாயிலாக, மாநகராட்சியில் பாரம்பரிய இனிப்பு, காரம் விற்க திட்டமிடப்பட்டுள்ளது. அதிரசம், தானிய லட்டு, முறுக்கு, தட்டைவடை உள்ளிட்ட, 10 வகையான பலகாரங்களும், மகளிர் குழுக்களின் சொந்த தயாரிப்பு சணல் பொருட்களும் கண்காட்சி மற்றும் விற்பனை நடக்கிறது. குறைந்த விலையில், பாரம்பரிய இனிப்பு வகைகள் மக்களுக்கு கிடைக்கும்.

பட்டாசு வெடித்து சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நாம், மரம் வளர்த்து இயற்கையை பாதுகாக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வகையில், பாரம்பரிய நாட்டு மரக்கன்றுகளும் கடையில் வழங்கப்படுகின்றன. வரும் 4ம் தேதி முதல், பசுமை தீபாவளி கொண்டாடப்படுகிறது," என்றார்.

## பெரியாறு அணை நீர்மட்டம் மூன்று நாளில் 4 அடி உயர்வு

கூடலூர்,"பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் அணையின் நீர்மட்டம், கடந்த 3 தினங்களில் 4 அடி உயர்ந்து நேற்று மாலை 125 அடியை எட்டியது.கடந்த சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்வரத்து 4410 கன அடியாக இருந்தது. கடந்த அக்., 31ல்

120.90 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி 4 அடி உயர்ந்து 125 அடியை எட்டியது. அணையில் இருந்து தமிழகப்பகுதிக்கு 411 கன அடி நீர் திறந்து விடப்பட்டுஉள்ளது. நீர் இருப்பு 3519 மில்லியன் கன அடியாகும்.தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

**தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தி குறையும் ஆபத்து! மாற்றுப் பயிருக்கு மாறும் கரும்பு விவசாயிகள்**



நெல்லிக்குப்பம்: தமிழக அரசு கரும்புக்கான விலையை அறிவிக்காததால் விவசாயிகள் மாற்று பயிர்களை பயிரிடத் துவங்கியதால் சர்க்கரை உற்பத்தி பாதிக்கும் நிலை உள்ளது.

ஆண்டுதோறும் அக்டோபர் 1ம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி வரை கரும்புக்கான ஆண்டாக கணக்கிடப்படுகிறது. மத்திய அரசு ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்துக்கு முன் கரும்புக்கான ஆதார விலையை அறிவிக்கும். அதையொட்டி மாநில அரசுகள் சூழ்நிலைக்கேற்ப கூடுதல் விலையை அறிவிக்கும். 2013-14 ஆண்டுக்கு மத்திய அரசு ஒரு டன் கரும்புக்கு விலை 2,100 ரூபாய் அறிவித்தது. தமிழக அரசு 2,650 ரூபாய் அறிவித்தது. இதில் வாகன வாடகை 100 ரூபாய் போக விவசாயிக்கு 2,550 ரூபாய் கிடைக்கும்.

ஆனால், மாநில அரசுக்கு கூடுதல் விலை நிர்ணயிக்க அதிகாரமில்லை என தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளனர். இதனால் அந்த ஆண்டு டன்னுக்கு 2,250 மட்டுமே

வழங்கினர். 2014-15 ஆண்டுக்கு மத்திய அரசு 2,200 ரூபாய், தமிழக அரசு

2,650 ரூபாய் அறிவித்தது. ஒரு சில தனியார் ஆலைகள் மட்டும் மத்திய அரசின் விலையை வழங்கியது. மற்ற ஆலைகள் நஷ்டம் எனக்கூறி அதைவிடக் குறைவாக வழங்கினர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மாநில அரசு அறிவித்த விலையில் தமிழகம் முழுவதும்

தனியார் ஆலைகள் 1000 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்துள்ளனர். நடப்பு ஆண்டான 2015-16ம் ஆண்டுக்கு மத்திய அரசு 2,300 ரூபாய் விலை அறிவித்துள்ளது.

ஆனால் கரும்பு பருவம் துவங்கி ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதுவரை தமிழக அரசு விலை அறிவிக்கவில்லை. தனியார் ஆலை உரிமையாளர்களை அழைத்துப் பேசி கடந்த இரண்டு ஆண்டு பாக்கியைப் பெற்றுத் தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. தனியார் ஆலை பிரச்னை கோர்ட்டில் இருந்தாலும் கூட்டுறவு ஆலைகளுக்கான விலையைக் கூட அறிவிக்காமல் தமிழக அரசு அலட்சியமாக உள்ளது.

மேலும், கரும்புக்கான விலை தெரியாததாலும் ஆட்கள் பற்றாக்குறை இருப்பதாலும் கரும்பு விவசாயிகள் கரும்பு பயிரிடுவதை கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தி வருகின்றனர். தற்போது சவுக்கைக்கு நல்ல விலை கிடைப்பதால் சவுக்கு போன்ற மாற்று பயிர்களை பயிரிடத் துவங்கியுள்ளனர்.

தமிழக அரசு விலை அறிவிப்பதோடு தனியார் ஆலைகளும் அந்த விலையைக் கொடுக்க நடவடிக்கை எடுத்து; சலுகைகளை அறிவித்தால் மட்டுமே கரும்பு விவசாயிகளைக் காப்பாற்ற முடியும்.

## இயந்திர முறையில் நடவு வேளாண் துறை அழைப்பு

திருப்போரூர்;இயந்திர முறையில் நடவு செய்ய, அரசு வேளாண் துறையால் ஆண்டு தோறும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மானிய தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், திருந்திய நெல் சாகுபடியினை, விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் பொருட்டு, இயந்திர முறையில் நடவு செய்ய, 2.5 ஏக்கருக்கு, 3,000 ரூபாய் என்ற வகையில் மானிய தொகை வழங்கப்பட்டு வருகிறது. திருப்போரூர் ஒன்றியத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், மற்றும் பொது விவசாயிகளுக்கு 2015 - -16 ஆண்டிற்கான நிதி, தற்போது, திருப்போரூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.

மேலும், நெல் நடவுக்கு முன் பசுந்தாழ் உரங்களை விதைத்து, 35 நாட்களில் மடக்கி உழுவதற்கு, 2.5 ஏக்கருக்கு, 2,000 ரூபாய் மானியமும் வழங்கப்பட்டு வருவதாக, திருப்போரூர் ஒன்றிய, வேளாண் துறை உதவி இயக்குனர் ரவிக்குமார் கூறினார்.

## மீனவர்களுக்கு நிவாரண நிதி

மாமல்லபுரம்:காஞ்சிபுரம் மாவட்ட மீனவர் குடும்பங்களுக்கான, மழைக்கால நிவாரண நிதி, அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது.தமிழகத்தில், கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு, ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில், தொழில் பாதிக்கப்படும். அந்த மாதங்களில் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்காக, குடும்பத்திற்கு, தலா 4,000 ரூபாய், நிவாரண நிதியை தமிழக அரசு, சில ஆண்டுகளாக வழங்கி வருகிறது.அதன்படி தற்போது, காஞ்சிபுரம் மாவட்டத்தின், கொட்டிவாக்கம் துவங்கி, ஆலம்பரைகுப்பம் வரையுள்ள, 44 மீனவ

கிராமங்களைச் சேர்ந்த மீனவர் குடும்பங்களுக்கான, நிவாரண நிதி அவரவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு உள்ளது.

### திருத்தணியில் 56 மி.மீட்டர் மழை

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், கடந்த, 24 மணி நேரத்தில், 340 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில், சில நாட்களாக பருவ மழை தொடர்ந்து பெய்து வருகிறது. கடந்த, 24 மணி நேரத்தில், மாவட்டம் முழுவதும், 340 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக, திருத்தணியில், 56 மி.மீட்டர் மழை பதிவாகியது.

### தொடர் மழையால் நெற்பயிர்கள் பசுமை

பொன்னேரி;தொடர் மழையால், நெற்பயிர்கள் பசுமையடைந்து, களை எடுக்கும் பணிகளில் விவசாயிகள், தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.மீஞ்சூர் ஒன்றியத்தில், நடவு மற்றும் நேரடி விதைப்பாடு மூலம், 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டு உள்ளது. விளை நிலங்களில் நெல் பயிரிட்டிருந்த விவசாயிகள் மழைக்காக காத்திருந்தனர்.இந்நிலையில், மூன்று தினங்களாக பொன்னேரி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், பரவலான மழை பெய்து வருகிறது.நேரடி விதைப்பாடு மூலம் பயிரிட்ட விவசாயிகள் தொடர் மழையால், நிம்மதி அடைந்து உள்ளனர். அனைத்து பகுதிகளிலும், விளை நிலங்களில், களை எடுக்கும் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.ஆண்டார்மடம், போலாச்சியம்மன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தால், விவசாய பணிகளை துவங்கலாம் என, காத்திருந்த விவசாயிகளும், விளை நிலங்களில் உழவுப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மழையின்றி, மஞ்சள் நிறத்தில் இருந்த நெற்பயிர்களும், மழைநீரினால், பசுமை அடைந்து உள்ளன.

## அசோலா சாகுபடி செயல் விளக்கம்

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, அசோலா சாகுபடி குறித்து, வேளாண் கல்லூரி மாணவியர், விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். வீரகனூரில் முகாமிட்டுள்ள, ரோவர் வேளாண் கல்லூரி மாணவியர், திட்டச்சேரி கிராமத்தில், அசோலா சாகுபடி குறித்து கூறியதாவது: புல் வகையை சேர்ந்த, அசோலா தண்ணீரில் மிதந்து வளர்வதாகும். பாத்தி அமைத்து, தார்பாலின் விரித்து, தண்ணீரை தேக்கி, அதில் மண், வறண்ட சாணம் கரைத்து, விதை தூவி விட்டால், நான்கு நாள் இடைவெளியில், விரைவாக வளரும் அசோலா புற்கள், கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகும். தட்டுப்பாடு ஏற்படும் சமயத்தில், அசோலா புல் வளர்ப்பு, கால்நடைகளுக்கு அதிக சத்துள்ள தீவனமாக பயன்படும்.

## அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

பனமரத்துப்பட்டி: நாழிக்கல்பட்டி கிராமத்தில், வேளாண் வணிகத்துறை சார்பில், விவசாயிகளுக்கு விவசாய பொருட்கள் மதிப்பு கூட்டுதல் பயற்சி அளிக்கப்பட்டது. பனமரத்துப்பட்டி யூனியன், நாழிக்கல்பட்டி கிராமத்தில், அட்மா திட்டத்தில், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில், 40 விவசாயிகளுக்கு விளை பொருட்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் தண்டபாணி தலைமை வகித்தார். சந்தியூர் கே.வி.கே., வேளாண் விஞ்ஞானி கீதா, வேளாண் அலுவலர் பிரவீனா விவசாய பொருட்களில் மதிப்பு கூட்டுதல் முறை குறித்து, பயிற்சி அளித்தனர். வேளாண்துறையில் திட்டங்கள் குறித்து, வேளாண் அலுவலர் கருணாநிதி பேசினார்.

## விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம்

ப.வேலூர்: வெங்கமேட்டில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள, அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ப.வேலூர் அடுத்த, வெங்கமேட்டில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் செயல்பட்டு வருகிறது. இங்கு, வியாழக்கிழமை தோறும் தேங்காய் பருப்பு ஏலம் நடக்கிறது. இங்கு, விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) லோகாம்பாள் தலைமை வகித்தார். இதில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டு கடன், உழவர் நல பாதுகாப்புத் திட்டம், சேமிப்பு கிடங்கு வசதி குறித்து விளக்கப்பட்டது. மேலும், விவசாயிகள் வெங்கமேடு சேமிப்பு கிடங்கை பயன்படுத்திக் கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

## உழவர் சந்தை வளாகத்தில் விலைப்பட்டியல் தேவை

குமாரபாளையம்: குமாரபாளையம் - இடைப்பாடி சாலையில், உழவர் சந்தை உள்ளது. இங்கு, தினமும் காலையில் விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இங்கு விற்கப்படும் காய்கறிகளின் விலைகளை பொதுமக்கள் அறிந்திட வேண்டி விலைபட்டியல் போர்டு வைக்கப்பட்டுள்ளது. இருந்தும், இந்த போர்டில் காய்கறிகளின் விலைகள் குறிப்பிடப்படுவதில்லை. இதனால், பொதுமக்கள் காய்கறிகளின் விலைகளை அறிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. ஊழியர்கள் விலைபட்டியலில் காய்கறிகளின் விலைகளை கூட குறிப்பிடாமல் இருப்பதால், யாருக்கும் எந்த பலனும் இல்லை. இது சம்பந்தமாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து விலைபட்டியலில் காய்கறிகளின் விலைகளை குறிப்பிட ஊழியர்களை அறிவுறுத்த வேண்டும்.

## இடி தாக்கி இறந்தவருக்கு ரூ.4 லட்சம் நிவாரணநிதி

பவானி: பவானி அருகே சில தினங்களுக்கு முன்பு, இடி தாக்கி பலியானவரின் குடும்பத்துக்கு, நிவாரண தொகை வழங்கப்பட்டது.

பவானி யூனியன் மோளகவுண்டன்பாளையம் புதுார் காலனியை சேர்ந்தவர் சோம்பான். விவசாய கூலி தொழிலாளி. கடந்த சனிக்கிழமை மாலை, தோட்டத்து வேலை முடிந்து, வாகனத்தில் வீட்டுக்கு சென்றார். அப்போது இடியுடன் மழை பெய்தது. இதில் இடி தாக்குதலுக்கு ஆளான சோம்பான், சம்பவ இடத்தில் உடல் கருகி இறந்தார். இதையடுத்து, அவரின் குடும்பத்துக்கு, தமிழக அரசின் நிவாரண தொகையாக, ரூ.4 லட்சத்துக்கான காசோலையை, சோம்பான் மனைவி முருகாளிடம், பவானி எம்.எல்.ஏ. நாராயணன் மற்றும் அதிகாரிகள் நேற்று வழங்கினர். தமிழக அரசு, ரூ.1 லட்சம் மட்டுமே, இதுபோன்ற இயற்கை மரணங்களுக்கு வழங்கி வந்தது. இப்போது இந்த நிவாரணத் தொகை, ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. அந்த வகையில், முதல் முறையாக இந்த நிதி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**தேயிலை வாரியத்துக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு தேசிய கருத்தரங்கில் தகவல்**

குன்னுார்: "தேயிலை வாரியத்துக்கு, 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, சிறு தேயிலை விவசாயிகளுக்காக, இரு மடங்கு சலுகைகள் உயர்த்தப்பட்டுள்ளன," என, தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராஜ் கூறினார்.

நீலகிரி மாவட்டம், குன்னுார் உபாசி அரங்கில், தென்னிந்திய தேயிலை வாரியம் சார்பில், சிறு தேயிலை விவசாயிகளுக்கான மூன்றாவது தேசிய கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில், தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராஜ் பேசியதாவது:

தரமான பசுந்தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்க, அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், தேயிலை வாரியத்துக்கு, 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, சிறு தேயிலை விவசாயிகளுக்காக, இரு மடங்கு சலுகைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இன்று விவசாய நிலத்தின் சர்வே எண் இருந்தாலே, தேயிலை வாரியத்தை அணுகி, மானியம் பெறலாம். சீனா, கென்யா போன்ற நாடுகள் தேயிலையை அதிகம் உற்பத்தி செய்வதால், நீலகிரி தேயிலைக்கு ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்த வரவேற்பு தற்போது இல்லை.

அரசின் 'இன்கோ சர்வ்' முன்னேற்றமடைவது, அவசிய தேவையாக உள்ளது. தரமான தேயிலையை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம், விவசாயிகளிடையே தோன்றியுள்ளது. விவசாயிகள், சுய உதவி குழுக்கள் துவங்கி, மானியம் பெற்று பயனடையலாம். இவ்வாறு, பால்ராஜ் கூறினார்.

எம்.பி.,க்கள் அர்ஜுனன், கோபாலகிருஷ்ணன், தாட்கோ வாரிய தலைவர் கலைசெல்வன் முன்னிலை வகித்தனர். நீலகிரி, கர்நாடகா, கேரள சிறு தேயிலை விவசாயிகள் பங்கேற்றனர்.

## நீலகிரியில் இரவெல்லாம் மழை அணைகளில் நீர்மட்டம் உயர்வு

மஞ்சூர்: மஞ்சூரில் பெய்த கன மழையால், அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தின் பல பகுதிகளில், மழை பெய்து வருகிறது. மஞ்சூரில், நேற்று முன்தினம் மாலை, 4:00 மணிக்கு துவங்கிய கன மழை, இரவு முழுவதும் நீடித்தது. இதனால் நீரோடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தேயிலை தோட்டம், மலை காய்கறி தோட்டங்களில் இருந்து,

வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட சகதி, குந்தா, கெத்தை அணைகளில் தேங்கி நிற்கிறது.

மாவட்டத்தில் மின் உற்பத்திக்கு பயன்படும் அப்பர்பவானி, பைக்காரா, மாயார், முக்குறுத்தி, அவலாஞ்சி, எமரால்டு உள்ளிட்ட பெரும்பாலான அணைகளின் தண்ணீர் அளவு, 5 அடி வரை உயர்ந்துள்ளது.

### சீமை கருவேல மரங்களை அகற்ற மர ஒழிப்பு இயக்கம் கோரிக்கை

கரூர்: 'பெரியதாதம்பாளையம் ஏரியில் உள்ள, சீமை கருவேல மரங்களை அகற்றி விட்டு, நாட்டு மரக்கன்று நட, ஊர்பொது மக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்' என, சீமை கருவேல மர ஒழிப்பு இயக்கம் சார்பில், கலெக்டர் ஜெயந்திடம் மனு அளிக்கப்பட்டது.

சீமை கருவேல மர ஒழிப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் செந்தமிழ்செல்வன், அரவிந்த்குருசாமி ஆகியோர் கூறியதாவது: கரூர் மாவட்டம், பரமத்தி யூனியன், பவித்திரம் பஞ்சாயத்து பெரியதாதம்பாளையத்தில், 300 ஏக்கர் பரப்பளவில் ஏரி உள்ளது. ஏரியில் நிரம்பும் கொள்ளளவு நீர் போக,மீதமுள்ள உபரி நீரானது 2,000 ஏக்கர் பாசனத்துக்கும், கரூர் நகர மக்களுக்கு குடிநீராகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கரூரில் நடக்கும் பழமை வாய்ந்த மாரியம்மன் கோவில் விழாவின் போது மக்கள் குடிநீருக்காகவும், புனித நீராடவும், மதகு மூலம் திறந்து விடப்படுவது நடைமுறையில் இருந்தது.

பொதுப்பணித்துறை: கடந்த, 1962ல் ஏரி பொதுப்பணித்துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலும், தற்போது வனத்துறை கட்டுப்பாட்டிலும் உள்ளது. ஏரியில் சீமை கருவேல மரங்கள் வனம்போல் உள்ளது. ஏரியின், 300 ஏக்கர் பரப்பளவும், தண்ணீரின்றி நிலத்தடி நீர் வறண்டு, கருவேல மர வனமாக காணப்படுகிறது. ஏரியின் சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய பெரியதாதம்பாளையம், சின்னதாதம்பாளையம்,

கணபதிபாளையம், கொத்தம்பாளையம், பல்லமருதப்பட்டி, மலச்சிப்புதூர், கிலுவம்பாளையம், இலுப்பகிணத்துபட்டி, குளத்துபட்டி ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரின்றி வறண்டு, விவசாயத்தை தவிர்த்து மாற்று வேலைக்கு செல்ல வேண்டிய சூழலில் விவசாயிகள் உள்ளனர்.

ஊர் மக்கள் தயார்: ஏரியில் இருக்கக்கூடிய சீமை கருவேல மரங்களை அகற்றி, மழை வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய நல்ல நாட்டு மரங்களை நட்டு பராமரிக்க ஊர்மக்கள் தயாராக உள்ளனர். அனுமதி வழங்க மாவட்ட நிர்வாகமும், வனத்துறையும் முன்வர வேண்டும். சீமை கருவேல மரங்களை அகற்ற, தமிழக அரசு 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. எங்கள் இயக்கம் சார்பில், பூஜ்யம் பட்ஜெட்டில் சீமை கருவேல மரங்களை அகற்றுவோம்.

நல்ல மரங்கள்: சீமை கருவேல மரங்கள் கீழ்நோக்கியும், மேல் நோக்கியும் வெப்பத்தை வெளியிடுவதால் அப்பகுதியே வெப்பம் சூழ்ந்து விடுகிறது. விறகுகளை எரித்து கரி மூட்டம் போடுவோருக்கும், வீட்டில் சமையலுக்கு பயன்படுத்துவோருக்கும் இதன் புகையில் உள்ள கொடிய நச்சு புற்றுநோயை உண்டாக்குகிறது. நிலங்களில் உள்ள மரங்களை வெட்டி, நல்ல மரங்களை நட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**5,000 ஏக்கரில் சாகுபடி துவக்க பி.டி.ஆர்., பெரியார் கால்வாய்களில் தண்ணீர் திறப்பு:விவசாயிகள் எதிர்பார்ப்பு**

தேனி:அணைகளின் நீர் மட்டம் உயர்ந்தும் பி.டி.ஆர்., கால்வாய், பெரியார் கால்வாய்களில் நீர் திறப்பு இல்லாததால், விவசாயிகள் 5 ஆயிரம் ஏக்கரில் சாகுபடிபணியை துவக்காமல் உள்ளனர்.

முல்லைபெரியாற்றின் மேட்டுப் பகுதியில் உள்ள உத்தமபாளையம், சின்னமனுார், தேனி ஒன்றியங்களில் உள்ள விளைநிலங்கள் பயன்பெறும் வகையில் பி.டி.ஆர்.கால்வாய், பெரியார் கால்வாய்கள்

அமைக்கப்பட்டது. இக்கால்வாய் பாசனத்தை நம்பி 5,200 ஏக்கர் நஞ்சை, மானாவாரி நிலங்கள் உள்ளன. பெரியாற்று தண்ணீர் இந்த வாய்க்கால்களில் திறந்து விடப்பட்டால், இங்குள்ள 40 கண்மாய்களுக்கு முறை வைத்து தண்ணீர் திறக்கப்படும். கண்மாய்களில் நீரை தேக்குவதால், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாய பணிக்கு வசதியாக இருக்கும்.

பெரியாறு, வைகை அணைகளில் 5 ஆயிரம் மில்லியன் கன அடிநீர் இருந்தால், இந்த இரு வாய்காலுக்கும் முறை பாசனப்படி தண்ணீர் திறக்கப்படும். அல்லது பெரியாறு அணை நீர் மட்டம் 132 அடியை எட்டினால் பி.டி.ஆர்.,கால்வாய், பெரியார் கால்வாயில் செப்., 15 முதல் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். தற்போது இரு அணைகளின் முழு கொள்ளவாக 4,790 மில்லின் கனஅடியை எட்டியுள்ளது. ஆனால், இன்னும் வாய்க்காலில் நீர் திறக்கப்படவில்லை.

தொடர்ந்து மழை பெய்வதால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து, கொள்ளளவு 5 ஆயிரம் மில்லியன் கன அடிநீரை எட்டிவிடும். எனவே, பி.டி.ஆர். மற்றும் பெரியாறு கால்வாய்களில் தண்ணீர் திறக்க வேண்டும்.தற்போது தண்ணீர் வரத்து இல்லாததால் விவசாய பணிகளை துவக்க முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இன்னும் 15 நாள் அல்லது ஒருமாதம் கழித்து தண்ணீர் திறந்தால் அறுவடை சமயத்தில் சிரமம் ஏற்படும். எனவே, 5,200 ஏக்கர் விளை நிலங்கள் பயன்பெற பி.டி.ஆர்., கால்வாய், பெரியார் கால்வாயில் தண்ணீர் திறக்க நடிவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

**விவசாயம் செய்ய ஆர்வம் :நரிக்குறவர்கள் மனு**

ராமநாதபுரம்: நிலங்களை அரசு தானமாக வழங்கினால் அதில் விவசாயம் செய்ய ஆர்வமாக உள்ளதாக, நரிக்குறவர்கள் நேற்று ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

ராமநாதபுரம் பேராவூர் எம்.ஜி.ஆர்.,நகரில் 120 நரிக்குறவர் குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்கள் நேற்று தலைவர் தேவராஜ் தலைமையில் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அதில் கூறியிருப்பதாவது: அரசு தடை செய்த வன விலங்குகளை நாங்கள் வேட்டையாடுவதில்லை. சிறிய பறவைகளை கூட வேட்டையாட வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதனால் குடும்பம் நடத்த முடியாமல் வறுமையில் தவிக்கிறோம். நாங்கள் விவசாயம் செய்ய தயாராக உள்ளோம். மாற்றுத்தொழில் செய்வதற்கு மானியத்துடன் கடன் வழங்க வேண்டும்.

எங்களுக்கு மாற்றுத்தொழிலுக்கு ஏற்பாடு செய்துதராவிட்டால் வீட்டுமனை பட்டா, ரேஷன்கார்டு, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டையை ஒப்படைத்துவிட்டு மீண்டும் ஆதிவாசியாக சென்றுவிடுவோம். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பருவ மழை: வீடு இழந்தோருக்கு உடனடி தாற்காலிக முகாம்கள்; ஆட்சியர்களுக்கு அரசு உத்தரவு**

வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்டு, வீடுகளை இழந்தோருக்கு தாற்காலிக முகாம்கள் அமைத்து, அவர்களை அங்கு தங்க வைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கிலோ அரிசி, சேலை, வேட்டி,

ஒரு கிலோ மண்ணெண்ணெய், ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை அளிக்க வேண்டுமெனவும் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டோருக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவிகள் குறித்து தமிழக வருவாய்த் துறை புதிய உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. இதுகுறித்து, வருவாய் நிர்வாக ஆணையாளர் அதுல்ய மிஸ்ரா அண்மையில் வெளியிட்ட உத்தரவு:

மழையால் பாதிக்கப்பட்டு உடல் உறுப்புகளை இழந்து 60 சதவீதம் வரை ஊனத்தின் அளவு இருந்தால், நபருக்கு ரூ.59,100-ம், முழுமையாக ஊனமடைந்தால் ரூ.2 லட்சமும் நிவாரணம் அளிக்கப்படும். அரசு மருத்துவரின் சான்றிதழின்படி இந்த நிவாரணம் வழங்கப்படும். கடுமையாகக் காயமடைந்து ஒரு வாரத்துக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், ரூ.12,700-ம், ஒரு வாரத்துக்குக் குறைவாக சிகிச்சை பெற்றால் ரூ.4,300-ம் அளிக்கப்படும்.

மழை பாதிப்பால், உடைகளை இழந்த குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்துக்கு ரூ.1,800-ம், வீட்டு உபயோகப் பொருள்களை இழந்தால் ரூ.2 ஆயிரமும் வழங்கப்படும். வீடுகளை இழந்தாலோ அல்லது தங்க முடியாத சூழல் ஏற்பட்டாலோ அவர்களை தாற்காலிக முகாம்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தாற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்படுவோருக்கு 10 கிலோ அரிசி, சேலை, வேட்டி, ஒரு கிலோ மண்ணெண்ணெய், ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

வேளாண் நிலங்கள்: மழையால் பயிர்கள் (நெல்லைத் தவிர்த்து) மூழ்கியிருந்தால், ஹெக்டேருக்கு ரூ.7,410-ம், பிற பணப்பயிர்களாக இருந்தால், ஹெக்டேருக்கு ரூ.18 ஆயிரமும், நெல் பயிர்களாக இருந்தால் ஹெக்டேருக்கு ரூ.13,500-ம் அளிக்கப்படும். எருமை, பசுமை மாடுகள் இறந்தால், தலா ரூ.30 ஆயிரமும், ஆடு, பன்றிகள் இறந்தால் தலா ரூ.3

ஆயிரமும் வழங்கப்படும்.

மழையால் மீனவர்களின் படகுகள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கப்படும். கட்டுமரங்கள் முழுமையாகச் சேதம் அடைந்திருந்தால் ரூ.32 ஆயிரம் முழு மானியமாகவும், பாதியளவு சேதமடைந்தால் ரூ.10 ஆயிரமும், வல்லம், இயந்திரப் படகுகள் சேதம் அடைந்தால் 35 முதல் 50 சதவீதம் வரை மானிய உதவி கொடுக்கப்படும் என்று தனது உத்தரவில் அதுல்ய மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

## குறைந்த விலை பருப்பு: அரசு புதிய கட்டுப்பாடு




தமிழக அரசின் குறைந்த விலை துவரம் பருப்பு நபருக்கு ஒரு கிலோ மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. வணிகர்கள் இதைப் பெற்று வெளிச் சந்தையில் விற்பதைத் தடுக்க இந்தப் புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை 26,975 கிலோ பருப்பு விற்பனையானதாக கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். துவரம் பருப்பு விலை உயர்வையடுத்து, மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்ட 500 டன் துவரையை, பருப்பாக உடைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த 10 நாள்களில் 250

டன்னுக்கும் மேற்பட்ட துவரை, பருப்பாக உடைக்கப்பட்டு பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டன.

சென்னை, திருச்சி, மதுரை, கோவை மாநகரங்களில் உள்ள 91 பல்பொருள் அங்காடிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் விற்பனைக்கு வந்தன. சென்னையில் 20 அமுதம் கடைகள் உள்பட 48 கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

முதல் நாளில் 26,975 கிலோ விற்பனை: ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110-க்கும், அரை கிலோ ரூ.55-க்கும் மேற்கண்ட அங்காடிகளில் காலை 10 முதல் இரவு 8 வரை விற்பனையாகிறது. தொடக்க நாளான ஞாயிற்றுக்கிழமை சென்னையில் உள்ள கூட்டுறவுக் கடைகளில் 5,843 கிலோவும், அமுதம் கடைகளில் வழியாக 9,785 கிலோவும் என 15,628 கிலோ விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதேபோல், கோவையில் 2,843 கிலோவும், திருச்சியில் 5,816 கிலோவும், மதுரையில் 2,688 கிலோவும் விற்பனையானது. மொத்தமாக, முதல் நாளில் 26,975 கிலோ விற்பனையானது.

கட்டுப்பாடு அமல்: இந்த நிலையில், துவரம் பருப்பு பயனாளிகளுக்கும், குடும்பத்தினருக்கும் மட்டுமே சென்றடைய வேண்டும் என்பதால் புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறியது:

ஒரு நபருக்கு ஒரு கிலோ மட்டுமே வழங்கப்படுகிறது. இரண்டு அரை கிலோ பாக்கெட்டுகள் கேட்டாலும் கொடுக்கப்படுகிறது. காலையில் வாங்கிய பிறகு மீண்டும் வந்தால், அவர்களுக்கு பருப்பு பாக்கெட் வழங்கப்படாது. தேவை ஏற்பட்டால் மறுநாள் வரலாம். வணிகர்கள் அதிகளவு பருப்பு பாக்கெட்டுகளை வாங்கிச் சென்று அதை வெளிச் சந்தையில் விற்பதைத் தடுக்கவே நடவடிக்கையாகும். பொது மக்களுக்குத் தேவையான பருப்பு பாக்கெட்கள் இருப்பில் உள்ளன என்றனர்.

**நெல்லை மாவட்டத்தில் மழை நீடிப்பு: 5 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிர் பாதிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிர்கள் அறுவடை செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளன.


திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் மழை நீடித்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதற்கிடையே, கார் பருவத்தில் தாமதமாக நடவு செய்த கோபாலசமுத்திரம், பிரான்சேரி, மேலச்செவல், சங்கன்திரடு, மேலக்கல்லூர் பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் அறுவடைப் பருவத்தில் உள்ள நெல்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வயலில் மழைநீர் தேங்கி அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராதாபுரத்தில் 40 மி.மீட்டரும், நம்பியாறு அணைப் பகுதியில் 23 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

நிரம்பும் கடனாநதி, ராமநதி அணைகள்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 81.30 அடி, சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 97.51 அடி, மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 64.25 அடியாக இருந்தது. கடனாநதி அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 71 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 1.75 அடி உயர்ந்து 71 அடியாகவும் இருந்தது.

கடந்த 10 தினங்களில் கடனாநதி அணையில் 30 அடியும், ராமநதி அணையில் 36 அடியும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. 84 அடி கொள்ளளவு கொண்ட இவ்விரு அணைகளும் ஒருசில தினங்களில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வீட்டு மேற்கூரையில் சூரிய மின்சக்தி அமைப்பு: 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்கள் அளிப்பு**



வீட்டு மேற்கூரையில் சூரிய மின்சக்தி அமைப்பை ஏற்படுத்த 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர். இவற்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் அந்த அமைப்பு பொருத்தப்பட்டுவிட்டது.

"முதல்வரின் சூரிய மேற்கூரைத் திட்டத்தில்' 1 கிலோவாட் சூரிய மின்சக்தி அமைப்பை 10 ஆயிரம் வீடுகளில் நிறுவ தமிழ்நாடு எரிசக்தி முகமை இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதற்காக தமிழக அரசு ரூ. 20 ஆயிரமும், மத்திய அரசு ரூ.30 ஆயிரமும் மானியமாக வழங்குகின்றன. மின் நுகர்வோர் ரூ.43 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரை செலுத்தினால் போதும்.

இதற்காக www.teda.in என்ற இணையதளத்தில், இணைய வழியிலோ அல்லது விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்தோ விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பித்த ஒரு மாதத்துக்குள் சூரிய மின்சக்தி அமைப்பு பொருத்தப்படும்.

தனி வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகளின் மேற்கூரைகளில் இந்த அமைப்பை பொருத்த தேர்ந்தெடுக்கப்பட்ட 19 நிறுவனங்களின் பட்டியலும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு விண்ணப்பிப்பது எப்படி? இவற்றில் வசிப்போர் ஒன்றாகவோ அல்லது தனித் தனியாகவோ விண்ணப்பிக்கலாம்.

ஒவ்வொரு மின் இணைப்புக்கும் மானியம் வழங்கப்படும். இதற்கான ஒப்பந்தத்தை வீட்டு உரிமையாளர்கள் சங்கமோ அல்லது குழுவினரிடமோ சம்பந்தப்பட்ட நிறுவனம் மேற்கொள்ளும். இதற்காக அனைத்து வீட்டு உரிமையாளர்களிடமும் அனுமதி பெற வேண்டும். மேலும், குடியிருப்புகளில் விளக்குகள், மோட்டார் பம்புகள், லிப்ட்டுகள் உள்ளிட்ட பொது பயன்பாட்டுக்காகவும் விண்ணப்பிக்கலாம். நெட் மீட்டர்: இந்த அமைப்பின் மூலம் நாளொன்றுக்கு 4 முதல் 5 யூனிட் மின்சாரம் வரை உற்பத்தி செய்யலாம். தேவை போக மீதமுள்ள மின்சாரத்தை மின் வாரியத்துக்கும் வழங்கலாம். தேவைப்படும்போது மின்வாரியத்திடமிருந்து பெறலாம். பெற்ற மின்சாரத்தில், வழங்கிய மின்சாரத்தைக் கழித்து மீதமுள்ள யூனிட்டுகளுக்கு மட்டும் மின் கட்டணம் செலுத்தலாம். ஒவ்வொரு மாதமும் ரூ.1,500 வரை மின் கட்டணத்தைச் சேமிக்க வாய்ப்புள்ளது. இதற்காக, தனியாக விண்ணப்பித்து ரூ.6 ஆயிரம் செலுத்தி நெட் மீட்டரைப் பெற வேண்டும். வரவேற்பு: இந்த நிலையில், சூரிய மின்சக்தி அமைப்பை வீடுகளில் பொருத்த மக்களிடையே வரவேற்பு உள்ளதாக அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இப்படியும் செய்யலாம்!

தமிழ்நாட்டில் குறைந்த விலை துவரம் பருப்பு, ஒரு கிலோ ரூ.110-க்கு விற்பனை செய்யும் நடைமுறை நவம்பர் 1-ஆம் தேதி தொடங்கியது. முதல் நாளில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை மாநகரங்களில் கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் அங்காடிகளில் சுமார் 27,000 கிலோ விற்பனை நடைபெற்றுள்ளது.

கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் அங்காடிகளில் இந்த அளவுக்கு அதிகமாக பருப்பு விற்பனை நடைபெற்றதில்லை. சென்னையில் 15,628 கிலோ முதல் நாளில் விற்பனையாகியுள்ளது. இது வழக்கத்தைவிட பல மடங்கு அதிகம். திருச்சியில் 14 கடைகளில் 5,816 கிலோ விற்பனை நடந்துள்ளது. ஆனால், திருச்சியின் இந்தக் கடைகளில் சராசரியாக ஒரு நாளுக்கு 250 கிலோ முதல் 400 கிலோ வரை மட்டுமே விற்பனையாகும்.

குறைந்த விலை துவரம் பருப்பை வாங்க வந்தவர்களில் உயர் வருவாய் பிரிவினரும் இருந்தனர் என்றாலும், பெரும்பாலானவர்கள் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்தான். இவர்களில் பலரும் குறைந்த விலையில் பருப்பு கிடைக்கிறது என்பதால், இந்த அங்காடிகளுக்கு முதல்முறையாக வருகை தந்தவர்கள். விலை குறைவு என்பதற்காக இந்த அங்காடிகளுக்கு வந்த ஒரு சில பெண்கள், அரை கிலோ பொட்டலங்களை மட்டுமே வாங்கினர். சமைத்துப் பார்த்து நன்றாக இருந்தால் இன்னும் வாங்குவோம் என்றும் வெளிப்படையாகவே கூறவும் செய்தனர். குறைந்த விலைப் பருப்புத் திட்டம் தமிழக நடுத்தர வருவாய்க் குடும்பங்களில் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

கூட்டுறவுத் துறை பல்பொருள் அங்காடிகளை மக்கள் தவிர்ப்பதன் காரணம், இங்கே தரமான பொருள்களை அதிகாரிகள் கொள்முதல் செய்ய மாட்டார்கள் என்றும், அதிகாரிகள் தங்களுக்கு கமிஷன் கொடுக்கும் வியாபாரிகளிடம் தரமற்ற பொருளை வாங்கி விற்பனைக்கு வைப்பார்கள் என்றும் பரவலாக மக்களிடம் ஒரு கருத்து உருவாகி இருப்பதுதான். பொது விநியோகக் கடைகளில் பருப்பு விற்கப்பட்டாலும், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் அதை வாங்குவதில்லை. அவர்களது அட்டைக் கணக்கில் அவை "ஏற்றப்பட்டு', சிறு உணவகங்களுக்கு விற்கப்படுகிறது என்பது பரவலாக முன்வைக்கப்படும் விமர்சனம். அதில் உண்மை இல்லாமல் இல்லை.

துவரம் பருப்பு குறைந்த விலையில் கிடைக்கிறது என்பதற்காக கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அங்காடிகளுக்கு மக்கள் வருவார்கள் என்றால், இந்த அங்காடிகளில் அனைத்துப் பொருள்களையும் ஏன் தரமாகவும், குறைந்த லாபத்திலும் விற்பனை செய்யக் கூடாது என்கிற எதிர்பார்ப்பு எழுகிறது.

ஒரு குடும்பத்தின் அடிப்படை உணவுப் பொருள்களின் தேவை என்பவை: அரிசி, பருப்பு, புளி, மிளகாய், சமையல் எண்ணெய் ஆகியவை. ஆனால், இன்றைய நடுத்தர வருவாய்ப் பிரிவினரின் மளிகைச் சாமான் பட்டியலில் இதன் அளவும், இதற்கான தொகையும் சரிபாதியில் குறைவு. ஒரு நடுத்தரக் குடும்பங்கள், நகரின் சங்கிலித்தொடர் கடைகளில் பொருள்கள் வாங்கினால் அதில் பாதிக்கும் மேற்பட்ட செலவு எதற்கானது என்று பார்த்தால், துணி துவைக்கும் சோப்பு, சோப்பு பவுடர், உடலுக்கான குளியல் சோப்புகள், சென்ட் வகைகள், பற்பசை, தலைமுடிக்கான வாசனை எண்ணெய், ஹார்லிக்ஸ் போன்ற ஊட்டச்சத்து உணவுகள், அவசர உணவுத் தயாரிப்புக்கான கார்ன்பிளேக்ஸ் வகைகள் (இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டிய இரண்டு நிமிட நூடுல்ஸ் இரு மாதங்களில் சந்தைக்கு மீண்டும் வந்துவிடும்), பிரெட், பிஸ்கட், நொறுக்குத்தீனிப் பொட்டலங்கள் இத்தியாதிகள்தான்.

உயர், நடுத்தர வருவாய்ப் பிரிவினரைப்போல மாத வருவாய் ரூ.50,000-க்கும் கீழே உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர் இப்பொழுதும் அருகில் உள்ள பலசரக்குக் கடைகளைத்தான் தங்கள் தேவைக்கு நாடுகிறார்கள். விலைவாசி உயர்வால் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இவர்கள்தான்.

தற்போது மக்கள் நலன் கருதி, துவரம் பருப்பை விலையைக் குறைத்து கூட்டுறவுத் துறை மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யும் தமிழக அரசு, குறைந்த வருவாய் நடுத்தரப் பிரிவினர் அதிகம் பயன்படுத்தும் மளிகைச் சாமான்கள்

அனைத்தையும் குறைந்த விலையில் விற்பனை செய்யாவிட்டாலும் வணிக இலச்சினை கொண்ட அனைத்துப் பொருள்களையும், அதன் தயாரிப்பாளர்கள் வழங்கும் விலையில் நியாயமான லாபத்துடன் (அதுவும்கூட நடைமுறைச் செலவுக்காகத்தான்) விலை நிர்ணயித்து விற்றால், அதுவே அவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும்.

பருப்பு, அரிசி ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் ஊழல் செய்து தரமற்ற பொருள்களை வாங்க முடிவதைப் போன்று, வணிக இலச்சினை கொண்ட மளிகைச் சாமான்கள், சமையல் எண்ணெய் ஆகியவற்றில் ஊழல் செய்ய இயலாது. ஆகவே, வணிக இலச்சினை கொண்ட அனைத்துப் பொருள்களையும் கூட்டுறவுத் துறை பல்பொருள் அங்காடிகளின் மூலம் வழங்க முடியுமானால் மக்கள் அதிக அளவில் பயன் அடைவார்கள். இங்கு விற்பனையாகும் பொருள்களுக்கு தமிழக அரசு வரிச் சலுகை அளிக்குமேயானால், அது மிகப் பெரிய அளவில் மக்களின் வரவேற்பைப் பெறும்.

நடுத்தர வருவாய்ப் பிரிவினர் "ஒரு முறை' இலவசங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு வகையில் சேமிப்பு கிடைப்பதையே விரும்புகிறார்கள். தமிழ்நாட்டில் கூட்டுறவு அங்காடிகள் விற்பனையில் கொடிகட்டிப் பறந்த காலம் ஒன்று இருந்தது. மீண்டும் அதை மீட்டெடுக்க முடியும்.

## பாதுகாப்பற்ற இறைச்சி உணவுகள்

அசைவ உணவு உண்பவர்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் மிக அதிகம். அதிக புரதச் சத்துகள் அடங்கிய அசைவ உணவுகளான மீன் மற்றும் இறைச்சி அதிகமாக இம்மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றியிறைச்சி, கோழியிறைச்சி போன்றவை தற்போது மிக அதிகமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. பொதுமக்களிடம் விற்கப்படும் இத்தகைய இறைச்சி உணவுகள் பல நிலைகளில் விதிமுறைகள் மீறப்படுவதால் பல கொடிய நோய்கள்

ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்புத் துறை, நகராட்சி, நகர் நலத் துறை, பொது சுகாதாரம் மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் துறை இணைந்து இத்தகைய விதி மீறல்களைக் கண்காணித்து மக்களுக்கு பாதுகாப்பான இறைச்சி உணவுகளை விற்பனைக்கு அனுமதிக்க வேண்டும்.

தமிழகத்தில் 18-ஆவது பண்ணை விலங்குகள் கணக்கெடுப்பின்படி, சராசரியான காளை மற்றும் பசுக்கள் இணைந்து 112 லட்சமும், எருமை மாடுகள் 20 லட்சமும், 80 லட்சம் செம்மறியாடுகளும், 93 லட்சம் வெள்ளாடுகளும், மூன்று லட்சம் பன்றிகளும் உள்ளன.

இந்திய அளவில் எண்ணிக்கையில் தமிழகத்தில் கோழி 2-ஆம் இடத்திலும், செம்மறியாடு 4-ஆம் இடத்திலும், வெள்ளாடு 7-ஆவது இடத்திலும், காளை மற்றும் பசு 9-ஆவது இடத்திலும், எருமை 10-ஆவது இடத்திலும் உள்ளன. உணவுக்காக இத்தகைய விலங்குகள் மற்றும் பறவைகள் கொல்லப்படுவதும் தமிழகத்தில் அதிகம்.

தமிழ்நாடு விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் 1958-இன் படி, உணவுக்காக விலங்குகளைக் கொல்வதற்குத் தகுதிச் சான்றுகள் இருப்பின் அவ்விலங்குகளைக் கொல்லலாம். விலங்குகள் என்பது காளை, மட்டக் காளை, பசு, எருமை முதலியன அடங்கும்.

தகுதிச் சான்றிதழ் 10 வயதிற்கு அதிகமான, வேலை செய்வதற்கும், சந்ததிகளை உருவாக்கயியலா அல்லது குணமாக்கவியலா நோய்களைத் தாங்கிய விலங்குகளுக்கு மட்டும் வழங்கப்படும். இதில் விதிமுறை மீறலிருப்பின் மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்.

பின்னர், 1976-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் தேதி பசுக்களைக் கொல்வதற்கான தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. தமிழகத்தில் உள்ள எந்த இறைச்சி கொட்டில்களிலும் பசுக்கள் மற்றும் கன்று போடாத இளம் பசுக்களைக் கொல்லக்கூடாது என சட்டம் உள்ளது.

மத்திய அரசின் விலங்குகள் வதைச் சட்டம் 1960-இன் படி,

விலங்குகளை வதைப்பது, பால் அதிகமாக சுரப்பதற்கு செய்யப்படும் வழிமுறைகள் போன்ற பல விஷயங்களைக் குறித்த வழிமுறைகள் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின், பல சட்டத் திருத்தங்கள் வெவ்வேறு காலக் கட்டங்களில் மாற்றியமைக்கப்பட்டன. அத்தனை சட்டங்களும் விலங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளன.

மத்திய அரசின் விலங்குகள் வதைச் சட்டம் 1960-இன் கீழ், 2001 மார்ச் 26-ஆம் தேதி வெளிட்ட அறிக்கையில், நகராட்சி இறைச்சிக் கொட்டில்கள் மற்றும் தனியார் இறைச்சி கொட்டில்களில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

விலங்குகள் வதை செய்யப்படும் இறைச்சிக் கொட்டில்கள் மத்திய மற்றும் மாநில நகராட்சித் துறைகளில் உரிமம் பெற்றிருக்க வேண்டும். நகராட்சிக்கு உள்பட்ட பகுதியில், அரசு அங்கீகாரம் பெறாத இறைச்சிக் கொட்டில் மற்றும் சட்ட விதிமுறைக்குள்பட்ட அதிகாரக் குழுவின் உரிமம் பெறாத நபர்கள், விலங்குகளைக் கொல்வதற்கு உரிமம் இல்லை.

சினையான விலங்குகள் மற்றும் மூன்று மாதக் குட்டிகளை உடைய விலங்குகளைக் கொல்வதற்கு உரிமையில்லை. உணவுக்காகக் கொல்லப்படும் விலங்குகளுக்கு கால்நடை மருத்துவரிடமிருந்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

இம்மருத்துவர் இந்திய கால்நடை மருத்துவக் கழகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது நகராட்சி கால்நடை மருத்துவராக இருக்க வேண்டும். இம்மருத்துவர், கொல்லப்படும் விலங்குகளை முழுவதுமாக ஆய்ந்து சான்றிதழ் வழங்க வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு 12 விலங்குகள் அல்லது ஒரு நாளுக்கு 96 விலங்குகளுக்கு மேல் சான்றிதழ் வழங்க இயலாது.÷

கால்நடை மருத்துவர் ஒவ்வொரு விலங்குகளுக்கும் வழங்கும் உடல் தகுதி சான்றிதழ், மத்திய அரசு வழங்கியுள்ள (மாதிரி) சான்றிதழ் முறையில் இருக்க வேண்டும். அனுமதி வழங்கப்பட்ட விலங்குகள் 24 மணி நேரத்துக்குப் பிறகே கொல்லப்பட வேண்டும். அதுவரையில்

இறைச்சி கொட்டிலில் தனியாக வசதி செய்யப்பட்ட இடத்தில் உணவு, தண்ணீர் வழங்கி பாதுகாக்கப்பட வேண்டும். பின்னர், வேறு விலங்குகளின் கண்முன்னே விலங்குகள் கொல்லப்படக் கூடாது. கொல்வதற்கு முன் இந்த விலங்குகளுக்கு, வேறு எந்த வேதிப் பொருள்களோ, மருந்துகளோ, ஹார்மோன்களோ வழங்கி இருக்கக் கூடாது. மேலும், கொல்லப்படும் இடம், தோலுரிக்கும் இடம், கழிவுகள் இடும் இடம், வெட்ட பயன்படுத்தும் உபகரணங்கள் குறித்த பல விதிமுறைகள் இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொருத்தவரையில், இச்சட்ட விதிமுறைகள் பெரும்பாலும் பின்பற்றப்படுவதில்லை. பல பகுதிகளில் அமைந்துள்ள இறைச்சிக் கொட்டிலில் விலங்குகளைக் கொல்வதற்கான எந்த அடிப்படை வசதிகளும் செய்யவில்லை. விலங்குகள் இறைச்சிக்காக குளக்கரைகளிலும், வீதிகளிலும் அனுமதிக்கப்படாத இடங்களிலும் வெட்டப்படுகின்றன. சுகாதாரமில்லாத அனுமதிக்கப்படாத இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

விலங்குகள் வழி மனிதர்களுக்கு பரவும் பல கொடிய நோய்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. சுகாதாரமற்ற முறையில் பல வழிகளில் விதிமுறைகளை மீறி பொதுமக்களிடம் விற்கப்படும் இவ்விறைச்சிகளால் பல நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு சில விதிமுறை மீறல்கள் கண் துடைப்புக்காக தடுக்கப்பட்டாலும் தொடர்ந்து மாநில, மாவட்ட நிர்வாகத்தால் கண்காணிக்கப்படாமல் இருப்பது பெரும் ஆபத்தை உருவாக்கும்.

## பருப்பின் மகத்துவம்!

இதுகாறும் அரிசிப் பஞ்சம், வெங்காயம் தட்டுப்பாடு என்று ஆட்சியாளர்களைப் பயமுறுத்திய உணவுப் பொருள்களில் இப்போது பருப்பும் தனது பங்குக்கு பயமுறுத்தத் தொடங்கி உள்ளது. பருப்பின்

முழுமையான வரலாற்றினை 1963-இல் இருந்து சற்று புரட்டிப் பார்ப்போம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் முடிவுற்றபின், பருப்பு வகைகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படாமல் பெரும்பாலும் நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பயிர் செய்து நமது சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டோம். எந்தக் காலத்திலும் துவரை சாகுபடி தமிழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இருந்தது இல்லை. காரணம் நமது மண் வளமா அல்லது வேறு காரணங்களா என்பது தெரியவில்லை.

பொதுவாக, மகாராஷ்டிர மாநிலத்தின் விதர்பா பகுதியில் மிகுதியாக துவரை சாகுபடி செய்யப்பட்டது. அதன் அறுவடைக்காலம் டிசம்பர் முதல் ஏப்ரல் வரையாகும். 1963-இல் 100 கிலோ எடை கொண்ட மூட்டை ஒன்றின் விலை 48 ரூபாய் முதல் 55 வரை ஆகும். விளையும் இடத்திலிருந்து தமிழகத்துக்கு ரயில் மூலம்தான் கொண்டு வர முடியும். இப்போது போல் லாரி போக்குவரத்து அந்த நாளில் கிடையாது. ரூபாய் ஐந்து செலவில் தமிழகத்துக்குக் கொண்டு வரலாம்.

100 கிலோ துவரையைப் பருப்பாக உடைத்தால் 75 முதல் 77 கிலோ வரை பருப்பு கிடைக்கும். நியாயமான லாபத்தைச் சேர்த்து வணிகர்கள் ரூபாய் 75 வரை 100 கிலோ பருப்பை விற்று வந்தனர். அநேகமாக ஏப்ரல், மே மாதங்களில் இந்தப் பகுதி துவரை அனைத்தும் உபயோகித்துத் தீர்ந்து விடும்.

அகில இந்திய அளவில் துவரை வரத்து மிக அதிகமாக உள்ள சந்தையானது மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள லாட்டூர் என்பதாகும். சென்ற ஆண்டு தென் மேற்குப் பருவமழை லாட்டூர் பகுதியில் பொய்த்து விட்டதால் நாட்டின் துவரை விளைச்சல் பாதிக்கப்பட்டது உண்மை.

ஏப்ரல் மாத இறுதியிலிருந்து உத்தரப் பிரதேச மாநிலத்தில் துவரை அறுவடை தொடங்கி விடும். மிகப்பெரிய மாநிலமானதாலும் வளமான

மண், வற்றாத ஜீவநதிகள் பாயும் மாநிலமானதாலும் அங்கு விளையும் துவரை மகாராஷ்டிர மாநிலத்தின் அடுத்த அறுவடை வரை தட்டுப்பாடின்றி நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளுக்கு தாராளமாக அனுப்பப்பட்டு வந்தது.

மத்தியப் பிரதேசத்தில் காதர்வாடா, பிப்பிரியா பகுதிகளில் விளையும் துவரை அந்த மாநிலத்தின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. 1976-ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் பருத்தி அதிகமாக விளையும் பகுதியான பரூச் மாவட்டத்தில் பருத்திக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்று துவரை விதைத்து நல்ல மகசூல் கண்டதோடு விவசாயிகளும் பயன் பெற்றனர்.

இன்று வரை அந்தப் பகுதியிலிருந்து தமிழகத்துக்குத் துவரை வந்து கொண்டிருக்கிறது. பஞ்சாப், மேற்கு வங்கம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஆங்காங்கு விளையும் துவரை அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் உள்ளது.

1963-இல் 48 ரூபாய் முதல் 55 வரை விற்ற துவரை, 1971-ஆம் ஆண்டில் 103 ரூபாய் விலையைத் தொட்டுவிட்டது. இது பணவீக்கத்தின் காரணமாக இருக்கலாமே ஒழிய, தட்டுப் பாட்டினால் நேரிட்ட விலையேற்றம் அல்ல. 1979-ஆம் ஆண்டில் 100 கிலோ துவரை விலை 400 ரூபாயாக உயர்ந்தது.

இந்த விலை ஏற்றத்துக்கு பணவீக்கத்தையோ அல்லது விளைச்சல் குறைச்சலையோ காரணம் காட்ட இயலாது. 2013-இல் குவிண்டால் 4,400 ரூபாய்க்கு விற்ற துவரை இரண்டு ஆண்டுகளில் 3,300 ரூபாய் கூடி ரூபாய் 7,700 ஆனதன் காரணம் என்ன என்று எந்த அரசும் கண்டு கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல. 2015 அக்டோபரில் துவரை விலை குவிண்டால் ரூ. 14,000-க்கும், துவரம் பருப்பு ரூ. 20,000-க்கும் மேல் விற்கத் தொடங்கிய பின்னர்தான் அரசு விழிக்கத் தொடங்கி இருக்கிறது.

தற்போது இந்தக் கட்டுரையின் முக்கியமான பகுதிக்கு வருவோம். என்ன

காரணத்தினால் இந்தத் திடீர் விலையேற்றம்? புள்ளி விவரக் கணக்கின் படி இந்த ஆண்டு விளைச்சல் 12 சதவீதம் குறைவு என்று தெரிகிறது. ஆனால், விலை கூடுதல் 300 சதவீதம். என்ன காரணம் என்று ஆராய்வோம். அதற்கு முன்னதாக என் மனதில் தோன்றும் இரண்டு வினாக்களுக்கு யாராவது விடை பகன்றால் நலம்.

நாடெங்கும் பருப்பு விலை ஏறுகிறது என்ற கூக்குரல் அரசின் காதில் எட்டிய உடன் அவர்கள் கொடுத்த முதல் அறிக்கை என்னவென்றால் விளைச்சல் குறைவின் காரணமாக ஏற்பட்ட இந்தத் தட்டுப்பாட்டைச் சரிசெய்ய 5,000 டன் பருப்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்றும், அடுத்த சில நாள்களில் கூடுதலாக 2,000 டன் இறக்குமதி செய்து விலை ஏற்றத்தைத் தடுத்து விடுவோம் என்றும் கூறினார்கள்.

ஆனால், தற்போது ஒரு லட்சம் டன் பதுக்கப்பட்ட பருப்பு பிடிபட்டுவிட்டதாகவும் விரைவில் அது மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு குறைந்த விலையில் மக்களுக்கு விநியோகிக்கப் படும் என்றும் கூறுகிறார்கள். உள்நாட்டிலேயே பதுக்கப்பட்ட பருப்பு ஒரு லட்சம் டன் இருப்பது தெரியாமல் 5,000 டன் பருப்பு வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் போகிறோம் என்பது இந்த நூற்றாண்டிலேயே மிகப் பெரிய முரண்பாடு எனலாம்.

சரி, உள்நாட்டில் ஒரு லட்சம் டன் பதுக்கல் பருப்பு பிடிபட்டுப் பறிமுதல் செய்யப்பட்டதாகச் செய்தி வெளியாகி உள்ளது. சாதாரணமாக தங்கம் அல்லது போதைப்பொருள் கடத்தப்பட்டால், கடத்தி வந்தவரின் பெயர் மற்றும் புகைப்படம் எல்லா ஊடகங்களிலும் வெளியிடப்படும் அல்லவா? இவ்வளவு பருப்பு யாரால் பதுக்கப்பட்டது என்ற விவரம் இதுவரை வெளியிடப்படவில்லையே ஏன்?

பொதுமக்களிடம் வியாபாரிகள் பதுக்கிவிட்டு இன்னும் விலை ஏற்றத்தைச் செயற்கையாகச் செய்து கொள்ளை அடிக்க நினைக்கிறார்கள் என்ற பிரசாரத்தை அரசு மேற்கொள்கிறது. இதன் பின்னணி என்ன? நம்

நாட்டில் எதற்கு வேண்டுமானாலும் பினாமி தாராளமாகக் கிடைப்பார்கள். நாட்டில் உள்ள தேச விரோத சக்திகள் வணிகர்கள் என்ற போர்வையில் சில பினாமிகளை உருவாக்கி அவர்கள் மூலமாக இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டது தான் உண்மை. அதற்கும் பல அதிகாரிகள் உடந்தையாக இருக்கக்கூடும்.

நாட்டில் உளவுத் துறை பயங்கரவாதிகளைக் கண்காணிக்க மட்டுமல்ல, இது போன்ற சமூக விரோதிகளை இனம் கண்டு அரசுக்கு எச்சரிக்கை செய்யும் பணியும் அவர்களுடையதுதான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஊகவணிகம், இணையவழி வர்த்தகம் என்ற பெயரில் பயறு, பருப்பு வகைகளையும் அனுமதித்ததால் செயற்கையான விலையேற்றம் அரங்கேறத் தொடங்கியது. பின்னர் இதுவே சமூக விரோதிகளுக்குப் பாதை அமைத்துக் கொடுத்து விட்டது.

என்னவோ இந்த 2015-ஆம் ஆண்டில்தான் 12 சதவீத விளைச்சல் குறைவு என்று கூறுகிறார்களே, இதற்கு முன்னர் இவ்வாறு 12 சதவீத விளைச்சல் எந்த ஆண்டும் குறைந்ததில்லையா அல்லது அப்போதெல்லாம் வணிகர்களுக்குப் பதுக்கத் தெரியவில்லையா? இதற்கு அரசு என்ன பதில் கூறப் போகிறது?

பொதுவாக, தமிழக மக்களும் தமிழக வணிகர்களும் சட்டத்தை மதித்து நடப்பவர்கள். இதற்குத் தமிழக அரசும் ஒரு காரணம். ஒரு லட்சம் டன் பருப்பு பிற மாநிலங்களில் பதுக்கப்பட்டிருந்தும் 100 டன் பருப்பு கூட இங்கு பதுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

பருப்பு என்றால் பொதுவாக துவரம் பருப்பை நாம் எண்ணினாலும், அரசு கைப் பற்றிய அனைத்தும் துவரம் பருப்புதானா என்று தெரியவில்லை. துவரம் பருப்பு தவிர உளுந்தம் பருப்பு, பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு, பட்டாணிப் பருப்பு, லென்டில் எனப்படும் மசூர் பருப்பு போன்றவையும் நுகர்வோர் அன்றாடம் பயன்படுத்தும் வகைகளில் சில.

துவரம் பருப்புக்கு அடுத்தபடியாக மக்கள் அதிகம் பயன்படுத்துவது

உளுந்தம் பருப்பு. துவரை சாகுபடிக்கும் உளுந்து சாகுபடிக்கும் நிறைய வேறுபாடு உண்டு. தமிழக மண் உளுந்து சாகுபடிக்கு ஏற்றதாக இருப்பதால் நமது தேவையை சுமார் 30 சதவீதம் பூர்த்தி செய்ய வல்லது நமது வேளாண்மை.

மேலும், துவரம்பருப்பு போன்று நாட்டு மக்கள் அனைவரும் உளுந்தம் பருப்பை தமிழக மக்கள் போல் பயன்படுத்துவதில்லை. ஆனால், நமது தேவையைக் கருத்தில் கொண்டே பல வட மாநிலங்களில் உளுந்து பயிரிடப்படுகிறது.

இறுதியாக, வருங்காலத்தில் இது போன்ற விலை ஏற்றம் வராமல் தடுக்க அரசு என்ன செய்ய வேண்டும் என்று காண்போம்.

1) மேலே குறிப்பிட்ட வளமான பகுதிகளில் அதாவது உத்தரப் பிரதேசம், பிகார் போன்ற மாநிலங்களில் மத்திய அரசு தனது நேரடிப் பார்வையில் துவரையைப் பயிரிடச் செய்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் நாடு தன்னிறைவு மட்டுமல்ல, ஏற்றுமதியும் செய்யும் அளவுக்கு விளைச்சலை உயர்த்த முடியும்.

2) சமூக விரோதிகள் பதுக்கலை ஏற்படுத்தி அரசு மீது மக்கள் வெறுப்பு கொள்வதை உளவுத் துறை தடுக்க வேண்டும்.

3) தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் நமக்குள்ள வசதிகளில் பயறு பருப்பு விளைச்சலை நமது தேவை முழுவதற்கும் உற்பத்தி செய்ய இயலாது என்றே கருதப்படுகிறது. எனினும், வேளாண் விஞ்ஞானிகளின் கருத்தையும் கேட்டறிந்து கொள்வது நல்லது.

கட்டுரையாளர்:

முன்னாள் பொருளாளர்,

தமிழ்நாடு உணவுப்பொருள் வியாபாரிகள் சங்கம், மதுரை.

உளவுத் துறையின் பணி பயங்கரவாதிகளை கண்காணிப்பது மட்டுமல்ல; உணவுப் பொருள்களை பதுக்கி வைக்கும் சமூக

விரோதிகளை இனம் கண்டு, அரசுக்கு எச்சரிக்கை செய்யும் பணியும் அவர்களுடையதே.

## பெங்களூரில் கன மழை: போக்குவரத்துப் பாதிப்பு

பெங்களூரில் ஆலங்கட்டி மழை பெய்ததால், வாகனப் போக்குவரத்து வெகுவாகப் பாதித்தது.

பெங்களூரில் திங்கள்கிழமை மாலை 4.30 மணி அளவில் திடீரென கனமழை பெய்தது. பசவனகுடி, ஜெய நகர், பனசங்கரி, சாந்தி நகர், ராஜாஜி நகர், மல்லேஸ்வரம், பிடிஎம் லேஅவுட், எச்எஸ்ஆர் லேஅவுட், மெஜஸ்டிக், காந்தி நகர், எம்.ஜி.சாலை, பிரிகெட் சாலை, கே.ஆர்.மார்கெட், தொம்மலூரு, மடிவாளா, மகாலட்சுமிலேஅவுட், கோரமங்களா, வில்சன்கார்டன் உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்தது. மழைநீர் சாலைகளில் வெள்ளம்போல் ஓடியதால், வாகனப் போக்குவரத்து வெகுவாக பாதித்தது. வேலைமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளானார்கள். சாலைகளில் மழைநீர் தேங்கியதால், பெரும்பாலான சாலைகளில் சாரைசாரையாக வாகனங்கள் மணிக்கணக்கில் காத்திருக்க நேர்ந்தது. இதனால், பணி முடிந்து வீடுகளுக்கு செல்லமுடியாமல் மக்கள் தவித்தனர்.

## கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் வருகை குறைவு

கொடைக்கானலில் கடந்த 2 நாள்களாக விடிய விடிய மழை பெய்து வந்த நிலையில் திங்கள்கிழமை காலை சாரல் மழையும், மாலையில் மிதமான மழையும் பெய்தது.

இதனால் வெள்ளிநீர் வீழ்ச்சி, பாம்பார் அருவி, பியர் சோழா அருவி உள்ளிட்ட பல்வேறு நீரோடைப் பகுதிகளில் நீர் வரத்து

அதிகரித்துள்ளது. குளிரும் வாட்டி எடுக்கிறது. மழை காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்தே காணப்படுகிறது.

### தொடர் மழை: சோத்துப்பாறை அணை நிரம்பியது

தொடர் மழை காரணமாக பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணை ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நிரம்பியது.

மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர்மழை காரணமாக அணையின் மொத்த உயரமான 126.28 அடியும் நிரம்பி வழிகிறது. அணைக்கு விநாடிக்கு 125 கனஅடி தண்ணீர் வருகிறது. இந்த நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

இந்த அணை மூலம் பாப்பையன்பட்டி கண்மாய், பெரியகுளம் கண்மாய், தாமரைக் குளம் கண்மாய் உள்பட பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளைச் சேர்ந்த 2,865 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தற்போது அணையில் நீர் நிரம்பி வழிவதால் இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### வடகிழக்கு பருவமழையால் விவசாயப் பணிகள் தொடக்கம்

ராஜபாளையம் மற்றும் சுற்றுப் பகுதியில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்யும் என்ற நம்பிக்கையில் நெல் நடவுக்கு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

ராஜபாளையம் மற்றும் சுற்றுப் பகுதியில் சத்திரப்பட்டி, முகவூர், தளவாய்புரம், சொக்கநாதன்புத்தூர் உட்பட பல்வேறு கிராமப்புற மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கின்றனர். கடந்த சில ஆண்டாக வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யாததால் விவசாய பரப்பு குறைந்து விளைநிலங்கள் தரிசாகி கிடக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் மழையை நம்பி விதைப்பதும், உரிய காலத்தில் மழை இல்லாமல் பாதிப்படைவதுமாக விவசாயிகளின் நிலை உள்ளது.

ஆரம்பத்தில் பெய்யும் மழை பின் பருவ மாற்றங்களால் பொய்க்கிறது. இதோடு அதிகரித்துவரும் நோய் தாக்குதல், செலவு அதிகரிப்பு, மின் தட்டுப்பாடு போன்றவற்றால் வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். வங்கியில் நகையை அடமானம் வைத்தும், பயிர்க்கடன் பெற்றும் விவசாயம் செய்தவர்கள் மழை இல்லாமல் பெரும் ஏமாற்றத்தையே எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தாண்டு காலதாமதம் ஆனாலும் வடகிழக்கு பருவமழை சமீபத்தில் துவங்கி உள்ளது. கடந்த காலங்களைப்போல இல்லாமல் இந்த மழை விவசாயத்திற்கு நிச்சயம் கைகொடுக்கும் என விவசாயிகள் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளனர். அதற்கேற்ப விவசாயப் பணிகளை துவங்கிவிட்டனர்.

ராஜபாளையம், தேவதானம், சேத்தூர், சிவகிரி பகுதியில் சில கண்மாய்களுக்கு தண்ணீர் வரத் துவங்கியுள்ளது. தொடர்ந்து மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் பலர் நெல் நாற்று பாவி வருகின்றனர். ஏற்கெனவே நாற்று பாவியுள்ள விவசாயிகள் நடவுக்கு உழவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதைத் தவிர எள், சோளம், பருத்தி, காய்கனிகள் போன்றவற்றையும் விவசாயிகள் விதைத்து வருகின்றனர்.

மழையால் இப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு மற்றும் தோட்டப்பயிர்கள் பசுமையாக காட்சிதருகிறது.

## ஆடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோயை தடுப்பது குறித்த பயிலரங்கம்

ஆடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோயைத் தடுக்கும் முறைகளை மேம்படுத்துவது தொடர்பான 5 நாள் பயிலரங்கம் சென்னையில்

திங்கள்கிழமை தொடங்கியது.

சென்னை வேப்பேரியில் உள்ள சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணைவேந்தர் திலகர் தொடக்கி வைத்தார்.

இந்தப் பயிலரங்கு குறித்து கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் பி.ஐ.கணேசன் கூறியதாவது:

ஆடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோய் தாக்கம் தென் மாநிலங்களிலேயே அதிகம் உள்ளது. இந்த நிலையில் மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகமும் இணைந்து இந்த நோய்த் தாக்கத்துக்கான தடுப்பூசியை கண்டுபிடித்து, நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த தடுப்பூசி பயன்பாடு காரணமாக, நோய் தாக்கம் தமிழகத்தில் குறைந்து வருகிறது.

இந்தியாவைப் பொருத்தவரை 26 வகையான வைரஸ்கள் மூலம் இந்த நோய் பரவுகிறது. தமிழகத்தில் 5 வகையான வைரஸ்களால் பரவுகிறது என்பதைக் கண்டுபிடித்து, அதற்கான ஒரே தடுப்பூசியை உருவாக்கினோம்.

இந்த நோய் தடுப்பு முறைகளை மேலும் மேம்படுத்தும் வகையிலும், நோய் கண்காணிப்பு முறைகளை மேம்படுத்தும் வகையிலுமே இந்த பயிலரங்கம் நடத்தப்படுகிறது.

இந்த நோய் தாக்கம் குறித்த ஆராய்ச்சிக்காக கிராமப் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டபோது, தடுப்பூசிகளை அரசு இலவசமாக அளிக்க வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கை குறித்து பயிலரங்கு தொடக்க விழாவில் பங்கேற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக உதவி பொது இயக்குநர் கயா பிரசாத்திடம் எடுத்துரைக்கப்பட்டது என்றார் அவர்.

**தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையும் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.
இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் திங்கள்கிழமை கூறியதாவது: தமிழகம், கேரளம், ராயலசீமா ஆகிய பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது.
லட்சத் தீவுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நிலைக் கொண்டிருந்த மேலடுக்குச் சுழற்சியானது, திங்கள்கிழமையன்று காலை வடக்கு நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது, அது கர்நாடகத்தை ஒட்டியுள்ள அரபிக் கடலில் நீடிக்கிறது.
இந்த மேலடுக்குச் சுழற்சியால், கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்தது.
130 மி.மீ பதிவு: குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் அதிகபட்சமாக 130 மி.மீட்டர் மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, கோவை தெற்கு, காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்தில் 100 மி.மீ, புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு, நாகை, கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் 80 மி.மீட்டர் மழையும் பதிவானது.
முன்னறிவிப்பு: மேலடுக்குச் சுழற்சியால், தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையும் அனேக இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றார் அவர்.

**தனியாருக்கு மீன் பிடி உரிமம்**

திருவள்ளூர் மாவட்டம், சத்தியமூர்த்தி சாகர் (பூண்டி ஏரி) நீர்த்தேக்கத்தில் மீன் பிடிப்பு உரிமம் 5 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருவள்ளூர் மாவட்டம், சத்தியமூர்த்தி சாகர் (பூண்டி ஏரி) நீர்த் தேக்கத்தில் மீன் பிடிப்பு உரிமத்தை 5 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட உள்ளது.

இதற்கான ஒப்பந்தப் புள்ளி விவரங்கள், ஏல நிபந்தனைகள் குறித்து மீன்வளத் துறை ஆணையர் அலுவலகம், நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், தேனாம்பேட்டை, சென்னை - 06 என்ற முகவரியில் ரூ. 500 + வாட் வரி (5 சதவீதம்) செலுத்தி நவம்பர் 2-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விவரங்களை, இலவசமாக www.tender.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட முகவரியில் நேரில் அல்லது தபால் மூலமாக வருகிற 13-ஆம் தேதி பகல் 12 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மேலும் விவரங்களுக்கு 044 - 27972457, 24336311 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### மழை நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேயர் ஆய்வு

கோவை மாநகராட்சிப் பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேயர் ப.ராஜ்குமார் திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

கோவை மாநகராட்சி பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையின் காரணமாக திருச்சி சாலை அருகே உள்ள 75-ஆவது வார்டு கொங்கு

நகர், அப்புசாமி ரியல் எஸ்டேட் குடியிருப்புப் பகுதி, 55-ஆவது வார்டு வீரபத்திரன் லே-அவுட் ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை அவர் பார்வையிட்டார்.

அப்போது, தேங்கியுள்ள மழை நீரை மின் மோட்டார் மூலம் அகற்றுவதற்கான பணியை உடனடியாகத் தொடங்க மாநகராட்சி அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

அவிநாசி சாலையில் உள்ள நவஇந்தியா அருகே உள்ள வாய்க்காலில் அடைப்புகள் ஏற்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பொக்லைன் மூலம் வாய்க்காலைத் தூர்வார உத்தரவிட்டார்.

மேலும் பரமேஸ்வரி லே-அவுட் பகுதியில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்தி சாலையை சமன்படுத்த உத்தரவிட்டார்.

பின்னர் 41-ஆவது வார்டு கந்தன் நகரில் வாய்க்காலின் குறுக்கே ஏற்பட்டுள்ள அடைப்புகளைப் சரிசெய்யவும் மேயர் ராஜ்குமார் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி பொறியாளர் ராஜேந்திரன், உதவி ஆணையர்கள் ரவிக்குமார், அமுல்ராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**வேளாண் பல்கலைக்கழகத்தில் நவம்பர் 6-இல் தேனீ வளர்ப்பு பயிற்சி**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறை சார்பில் வெள்ளிக்கிழமை (நவம்பர் 6) தேனீ வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில், தேனீ இனங்களை கண்டுபிடித்தல், பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை, நிர்வாகம், தேனீக்கு உணவு தரும் பயிர்கள், மகரந்தச் சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்,

தேனைப் பிரித்தெடுத்தல், தேனீக்களின் இயற்கை எதிரிகள், நோய் நிர்வாகம் உள்ளிட்டவை குறித்து விளக்கம் அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் பயிற்சி நாளான்று காலை 9 மணிக்கு முன்பாக வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறை அலுவலகத்துக்கு தங்களது சொந்த செலவில் வந்து சேர வேண்டும்.

பயிற்சியில் கலந்து கொள்வதற்கு ரூ.250 கட்டணம் செலுத்த வேண்டும். பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். இது குறித்த மேலும் விவரங்களுக்கு வேளாண்மைப் பல்கலைக்கழக பூச்சியியல் துறைத் தலைவரை நேரடியாகவோ, 0422-6611214 என்ற தொலைப்பேசி எண் மூலமாகவே தொடர்பு கொள்ளலாம்.

## கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றமில்லை

பல்லடம் பிராய்லர் கறிக்கோழி ஒருங்கிணைப்புக் குழு தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 67 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் திங்கள்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.48, சென்னையில் ரூ. 3.60.

## காங்கயம் உழவர் சந்தையில் காய்கறி வரத்து அதிகரிப்பு

காங்கயம் உழவர் சந்தையில் காய்கறி வரத்து அதிகரித்துள்ளது.

காங்கயம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியில் இருந்து விவசாயிகள் தோட்டத்தில் விளைவித்த பொருள்களை உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். தற்போது இச்சந்தையில் காய்கறி வரத்து அதிகரித்துள்ளது.

இதுகுறித்து உழவர் சந்தை நிர்வாக அலுவர் கூறியதாவது:

காங்கயம் உழவர் சந்தைக்கு அனைத்து வித காய்கறிகள், கீரைகள், பழங்கள் தினசரி விவசாயிகள் கொண்டு வருவதினால், நுகர்வோர்கள் அதிக அளவில் வந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம். கடந்த மாதத்தில் 2,01,536 கிலோ காய்கறி வரத்து இருந்தது. இதன் மதிப்பு ரூ. 53,38,095. விவசாயிகள் வருகை 1,692 நுகர்வோர்கள் வருகை 37,655 ஆக இருந்தது என்றார்.

திங்கள்கிழமை விற்பனையான காய்கறிகளின் விலை விவரம் (கிலோவுக்கு): தக்காளி ரூ.14, கத்தரிக்காய் ரூ. 36, வெண்டைக்காய் ரூ.38, பீர்க்கங்காய் ரூ. 30, புடலங்காய் ரூ. 28, அவரைக்காய் ரூ. 35, மிளகாய் ரூ. 22, சின்ன வெங்காயம் ரூ. 50, பெரிய வெங்காயம் ரூ. 45, கேரட் ரூ. 48, முள்ளங்கி ரூ. 24, உருளைக்கிழங்கு ரூ. 25 ஆகிய விலைகளில் விற்பனையானது.

### சீமைக் கருவேல மரங்களை அழிக்க வலியுறுத்தல்

சீமைக் கருவேல மரங்களை அழிக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இக்கூட்டமைப்பின் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு, விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளர் செ.நல்லசாமி தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ராமசாமி, கதிரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ் மக்களின் அடையாளமாகவும், பாரம்பரியமாகவும் கருதப்படுவது பனை மரங்கள். சுதந்திரத்திற்கு முன்பு தமிழகத்தில் மட்டும் 50 கோடி பனை மரங்கள் இருந்த நிலையில், தற்போது 5 கோடி பனை மரங்கள் மட்டுமே உள்ளன. பனை மரங்கள் அழிவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சீமைக் கருவேல மரங்கள் தமிழகம் முழுவதும் பரவிவிட்டன. ராமநாதபுரம் மாவட்டத்தை சீமைக் கருவை மாவட்டம் என்றே குறிப்பிடும் அளவிற்கு பல இடங்களில் விவசாயத்திற்கு இடையூறாக இந்த மரங்கள் உள்ளன. இவற்றின் வேர் 150 அடிக்கும் கீழாகச் சென்று நிலத்தடி நீரை உறிஞ்சுகிறது. தமிழகத்தில் தான் சீமைக் கருவேல மரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே, சீமைக் கருவேல மரங்களை அழிக்க வேண்டும் என்ற உயர்நீதிமன்ற தீர்ப்பை மதித்து அவற்றை முற்றிலுமாக அழிக்க தமிழக அரசு முன்வர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பருவமழை தீவிரமடைந்துள்ளதால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வந்த நிலையில் திங்கள்கிழமை அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 3300 கன அடியாக அதிகரித்துள்ளது.

இதனால், அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி உயர்ந்துள்ளது. பவானிசாகர், சத்தி, பவானி பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் அணையில் இருந்து ஆற்று மதகு, வாய்க்காலுக்கு திறந்துவிடப்படும் தண்ணீர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால் அணையின் நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 56.63 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,200 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 6.2 டி.எம்.சி.

**சத்தியமங்கலத்தில் பலத்த மழை**

சத்தியமங்கலம் பகுதியில் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்து வருகிறது.

சத்தியமங்கலம் நகர்ப் பகுதியில் திங்கள்கிழமை காலை முதல் இதமான காலநிலை நிலவியது. மாலையில் விட்டு விட்டு மழை பெய்தது. தொடர்ந்து, மழை பெய்து வருவதால் தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கி நிற்கிறது.

ஆசனூர் மலைப்பகுதியில் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் வெள்ளநீர் தேங்கியது. கழிவுநீர்க் கால்வாய்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சில வனச் சாலைகள் சேதமடைந்துள்ளன.

பலத்த காற்று காரணமாக, தலமலை சாலையில் மரங்கள் முறிந்து விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பருவமழை தீவிரமடைந்த நிலையில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளது என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**தேயிலை வாரிய தேசிய கருத்தரங்கு**

தேயிலை வாரியம் சார்பில் தேசிய அளவிலான 3-ஆவது கருத்தரங்கு குன்னூர் உபாசி அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்றது.

மத்திய அரசு சார்பில் தேயிலைத் தொழிலை மேம்படுத்த 12-ஆவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் ரூ. 200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியை பயன்படுத்தும் வகையில் தென் இந்திய தேயிலை விவசாயிகள், சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தியாளர்கள் வர்த்தகர்கள் உள்ளிட்டோரிடம் கருத்துகேட்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் பால்ராசு தலைமை வகித்தார். மாநிலங்களவை உறுப்பினர்கள் கே.ஆர்.அர்ஜுனன், சி.கோபாலகிருஷ்ணன், தாட்கோ தலைவர் எஸ்.கலைசெல்வன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், உலக சந்தையில் இந்திய தேயிலைத் தூளின் விற்பனையை அதிகரிக்க தேப்யான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், குறிப்பாக ஆர்கானிக், கிரீன் டீ உற்பத்தி மட்டுமல்லாமல் சிறு விவசாயிகள் வீடுகளில் இயற்கையாகவே தேயிலைத் தூள் உற்பத்தி செய்து தேயிலை விற்பனையை அதிகரிக்கவும், இதன் மூலமாக இத்தொழிலை நம்பியுள்ள அனைத்து தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுவது தொடர்பாக கருத்துக் கேட்கப்பட்டது.

மேலும், தேயிலை வாரியத்தின் புதிய நடவடிக்கையின் படி ஒரே இலை ஒரே விலை என்ற திட்டத்தின் கீழ் தரமான பசுந்தேயிலையை விவசாயிகள் தொழிற்சாலைகளுக்கு வழங்க வேண்டும். இதன் மூலமாக அனைத்து விவசாயிகளுக்கும் உரிய விலை கிடைக்கும். கடந்த மார்ச் மாதம் முதல் தேயிலைத் தூளுக்கு ஓரளவு விலை கிடைத்து வருகிறது. இதை அதிகப்படுத்தும் வகையில் விவசாயிகள் தரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பசுந்தேயிலையை விநியோகம் செய்ய வேண்டும் என கருத்தரங்கில் வலுயுறுத்தப்பட்டது.

## நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழை

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை பரவலாகப் பெய்து வரும் நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்து விடிய, விடிய பலத்த மழை பெய்தது. திங்கள்கிழமை காலை வரை மாவட்டத்தில் 536 மி.மீ., மழை பதிவானது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை வரை பதிவான மழை விவரம் (அளவு மி.மீட்டரில்): கெத்தை-68, கேத்தி-62, கோத்தகிரி-57, குந்தா-47, பர்லியாறு-44, கொடநாடு-37, கிண்ணக்கொரை-30, நடுவட்டம்-28, உதகை-27.4, அவலாஞ்சி-25, எமரால்டு-23, குன்னூர்-20.1, அப்பர்பவானி-20, கூடலூர்-16, தேவாலா-14, கிளன்மார்கன்-10, கல்லட்டி 7 மி.மீ.

## அணைக்கரையில் 50.4 மி.மீ., மழை

தஞ்சாவூர், நவ. 3: தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக அணைக்கரையில் 50.4 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் ஒரு வாரமாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): அணைக்கரை 50.4, பேராவூரணி 39, வெட்டிக்காடு 18, தஞ்சாவூர் 17, அய்யம்பேட்டை, ஈச்சன்விடுதி தலா 16, பாபநாசம் 14, பட்டுக்கோட்டை 10, நெய்வாசல் தென்பாதி 9.2, மதுக்கூர் 8.8, ஒரத்தநாடு 7.4, வல்லம் 6.5, அதிராம்பட்டினம் 5.6, கல்லணை 5.4, திருவிடைமருதூர் 3, குருங்குளம், திருவையாறு தலா 2, பூதலூர் 1.2, மஞ்சலாறு 1.

இதேபோல, திங்கள்கிழமை பகலிலும் பல இடங்களில் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் திங்கள்கிழமை மாலை 4 மணி வரை பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்): பேராவூரணி 39, மஞ்சலாறு 5.6, திருவிடைமருதூர் 5.2, அய்யம்பேட்டை, ஈச்சன்விடுதி தலா 4, பாபநாசம் 3, குருங்குளம் 2, அதிராம்பட்டினம் 1.2.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழகம், புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும்: சென்னை வானிலை மையம் தகவல்




சென்னை,

அரபிக்கடலில் நிலவும் மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும்

புதுச்சேரியில் அனேக இடங்களில் இன்று மழை பெய்யும் என சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

<u>மேலடுக்கு சுழற்சி</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கி பல மாவட்டங்களிலும் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. சென்னை உள்பட சில மாவட்டங்களில் அவ்வப்போது மழை தலைகாட்டுகிறது. அரபிக்கடலில் நிலைகொண்டுள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்றும் கனமழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.இதுகுறித்து வானிலை ஆராய்ச்சி மைய இயக்குநர் ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

லட்சத்தீவு கடல் பகுதியில் நேற்று நிலைகொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி வடக்கு நோக்கி நகர்ந்து, கர்நாடகம் அருகே உள்ள அரபிக்கடலில் நிலை கொண்டுள்ளது.

<u>இன்று கனமழை</u>

இந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அனேக இடங்களில் மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கனத்த மழை பெய்யக்கூடும்.

சென்னை நகரத்தை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரில் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றின் திசை மாறுவதாலும், மேல் அடுக்கு சுழற்சி அரபிக்கடல் பகுதிக்கு சென்றுள்ளதாலும் 2 நாட்களுக்கு பிறகு மழை குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

<u>இரணியலில் 13 செ.மீ. மழை</u>

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் பெய்துள்ள மழை விவரம் வருமாறு:- கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் அதிகபட்சமாக 13 சென்டி மீட்டரும், கோயம்புத்தூர்(தெற்கு), மதுராந்தகம் 10 செ.மீ., புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி, செங்கல்பட்டு, நாகப்பட்டினம், பெரியநாயக்கன்பாளையம் 8 செ.மீ., மயிலாடி 7 செ.மீ. மழையும் பெய்துள்ளது.

நீலகிரி கேத்தி, கோத்தகிரி, நாங்குநேரி, சென்னை அண்ணா பல்கலைக்கழகம், அரக்கோணம், உத்திரமேரூர், சென்னை விமான நிலையம் 6 செ.மீ., நாகர்கோவில், குடவாசல், மரக்காணம் 5 செ.மீ., குளச்சல், தக்கலை, திருச்செந்தூர், ராதாபுரம் 4 செ.மீ., சீர்காழி, பள்ளிப்பட்டு, சிவகாசி, சோளிங்கர் 3 செ.மீ., செங்குன்றம், பொள்ளாச்சி, அரிமளம், சாத்தான்குளம் ஆகிய இடங்களில் 2 செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது.

## இயற்கை இடர்பாடுகளில் சிக்கி பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தொகை உயர்வு தமிழக அரசு உத்தரவு




திண்டுக்கல்,

இயற்கை இடர்பாடுகளில் சிக்கி பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டு உள்ளது.

நிவாரணம் உயர்வு

இயற்கை இடர்பாடுகளில் சிக்கி உயிரிழப்பவர்கள், பாதிக்கப்படுபவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிவாரணத் தொகையை உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்த 27-ந் தேதி முதல் இந்த புதிய உத்தரவு நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி இயற்கை இடர்பாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1½ லட்சம் நிவாரணத்தொகை, ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

அதுமட்டுமின்றி உறுப்பு மற்றும் கண் பார்வை 40 முதல் 60 சதவீதம் பாதிக்கப்பட்டு இருந்தால் ரூ.59 ஆயிரத்து 100-ம், 60 சதவீதத்துக்கு மேல் பாதிப்புகள் இருந்தால் ரூ.2 லட்சமும், ஒரு வாரத்திற்கு மேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தால் ரூ.12 ஆயிரத்து 700-ம், ஒரு வாரத்திற்குள் அனுமதிக்கப்பட்டு இருந்தால் ரூ.4 ஆயிரத்து 300-ம் வழங்கப்படும்.

வீடுகள், பயிர்கள் சேதம்

இதே போல வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டு இருந்தால் ரூ.95 ஆயிரத்து 100-ம், மலைப்பிரதேசத்தில் உள்ள வீடுகள் எனில் ரூ.1 லட்சத்து ஆயிரத்து 900-ம், பகுதி சேதம் அடைந்த வீடுகளுக்கு ரூ.5 ஆயிரத்து 200-ம், குடிசை வீடுகள் முழு பாதிப்பு அடைந்தால் ரூ.5 ஆயிரமும், ஒரு பகுதி மட்டும் பாதிக்கப்பட்டால் ரூ.4 ஆயிரத்து 100 என நிவாரணம் வழங்கப்படும். இதே போல மாடுகள் உயிரிழந்தால் (ஒரு குடும்பத்துக்கு 2 மாடுகள் மட்டும் கணக்கிடப்படும்) ரூ.20 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது இந்த நிவாரணம் ரூ.30 ஆயிரமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இதே போல, கன்றுகள், கழுதை, கோழி, ஆடு உள்ளிட்டவை உயிரிழந்தாலும் நிவாரணம் வழங்கப்படுகிறது. பயிர் சேதத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரத்து 200 வீதமும், மண் சரிவு, வெள்ளத்தால் நிலம் பாதிக்கப்பட்டால் ஹெக்டேருக்கு ரூ.37 ஆயிரமும் வழங்கப்படும். இந்த தகவல் திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**மழை காரணமாக குளச்சலில் இருந்து குறைவான மீனவர்களே மீன் பிடிக்க சென்றனர் பெரும்பாலான கட்டுமரங்கள் கடற்கரையில் நிறுத்திவைப்பு**



மழை காரணமாக குளச்சலில் இருந்து குறைவான மீனவர்களே கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இதனால் பெரும்பாலான கட்டுமரங்கள், வள்ளங்கள் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

<u>குறைவான மீனவர்கள்</u>

குளச்சல் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. பெரும்பாலான மீனவர்கள் கட்டுமரம் மற்றும் வள்ளங்களில் மீன்பிடிக்க கடலுக்கு செல்கின்றனர். குளச்சல் பகுதிகளில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக மீன்பிடிக்க குறைவான அளவு மீனவர்களே கடலுக்கு சென்றனர்.

மீன்பிடிக்க மீனவர்கள் செல்லாததால் கட்டுமரங்கள், வள்ளங்கள் கடற்கரையில் மேடான பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதனால் குறைந்த அளவு மீன்களே கிடைத்தன. இதனால் மார்க்கெட்டில் மீன்களின் வரத்தும் குறைவாக இருந்தது.

<u>கரையில் நிறுத்தப்பட்டன</u>

வழக்கம் போல் சுமார் 10 நாட்களுக்கு மேல் கடலில் தங்கி மீன்பிடித்த விசைப்படகு மீனவர்கள், மீன்பிடித்துவிட்டு கரை திரும்பினார்கள். விசைப்படகுகளிலும் குறைந்த அளவே மீன்கள் கிடைத்தன. கட்டுமரத்தில் பிடித்த சிப்பி என்ற தோட்டு மீன்கள் குறைவாக கிடைத்தது.

இந்த மீன்கள் ஒரு கச்சா ரூ.750 வரை விலை போனது. இந்த சிப்பி மீன்களை குளச்சல் மீனவர்கள் ஏலமிட்டனர். இதனை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து சென்றனர். மழை காரணமாக கடல் லேசான சீற்றத்துடன் காணப்படுகிறது.

### மாவட்டத்தில் பரவலான மழை



தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கி உள்ளது. இதன் காரணமாக மதுரையில் கடந்த 3 நாட்களாக தினமும் மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் வானம் மேக மூட்டத்துடன் இருந்தது. பகல் 1 மணியில் இருந்து 2 மணி வரை சுமார் 1 மணி நேரம் பலத்த மழை பெய்தது. இந்த மழையால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளிலும், செல்லூர், மணிநகரம், பழங்காநத்தம் ஆகிய பகுதிகளில் உள்ள சுரங்க பாதைகளிலும் மழை நீர் குளம் போல் தேங்கி நின்றது. நேற்று முன்தினம் மாவட்டத்தில் சராசரியாக 10 மில்லி மீட்டர் மழை பெய்தது.

பதிவான மழையளவு விவரம் வருமாறு:- சிட்டம்பட்டி-5, கள்ளந்திரி-3, தனியாமங்கலம்-1, மேலூர்-11, சாத்தையாறு-15, வாடிப்பட்டி-6, திருமங்கலம்-5, உசிலம்பட்டி-9, மதுரை தெற்கு-19, தல்லாகுளம்-15, விரகனூர்-10, விமான நிலையம்-10, இடையப்பட்டி-2, புலிப்பட்டி-4, சோழவந்தான்-5, மேட்டுப்பட்டி-7, குப்பணம்பட்டி-5, பேரையூர்-30, ஆண்டிப்பட்டி பங்களா-34 ஆகும்.

**தேயிலை வாரிய செயல்இயக்குனர் தகவல் கிராமங்கள் தோறும் விவசாயிகள் சங்கம் தொடங்க நடவடிக்கை**




குன்னூர்,

கிராமங்கள் தோறும் விவசாயிகள் சங்கம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேயிலை வாரிய செயல்இயக்குனர் பால்ராசு தெரிவித்துள்ளார்.

<u>கருத்தரங்கு</u>

12–வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய அரசு தேயிலை விவசாயிகளுக்கு ரூ.200 கோடி நிதி ஒதுக்கி உள்ளது. இந்த நிதியில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு எந்த வகையில் பயன் கிடைக்கும் என்ற தலைப்பில் தேயிலை வாரியமும், தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்கமும் இணைந்து 3–வது தேசிய கருத்தரங்கை குன்னூர் உபாசியில் நடத்தின.

கருத்தரங்கிற்கு தென்னிந்திய தேயிலை சிறு விவசாயிகள் சங்க தலைவர் டாக்டர் எஸ்.ராமு தலைமை தாங்கினார். இதனை அர்ஜுனன் எம்.பி. தொடங்கி வைத்தார். இதில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல்

இயக்குனர் பால்ராசு கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>விவசாயிகள் சங்கம்</u>

தேயிலை விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு 12–வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதி ஒதுக்கி உள்ளது. ரூ.200 கோடி நிதி சிறு விவசாயிகளின் பல்வேறு வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் கவாத்து, மறுநடவு போன்றவற்றுக்கு எவ்வளவு மானியம் தர முடியும் என்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. தென்னிந்திய தேயிலையை மேம்படுத்த இந்த கருத்தரங்கு உதவிகரமாக இருக்கும். குறு தேயிலை தொழிற்சாலைகள் அமைக்கவும், கிராமங்கள் தோறும் விவசாயிகள் சங்கம் தொடங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக இந்த கருத்தரங்கில் திட்டம் வகுக்கப்படும். தரமான தேயிலை பறிப்பது மற்றும் தோட்ட பராமரிப்பில் உள்ள செலவுகளை குறைப்பது குறித்தும் கருத்தரங்கில் தகவல் தெரிவிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கில் கோபாலகிருஷ்ணன் எம்.பி., தாட்கோ வாரிய தலைவர் கலைச்செல்வன், குன்னூர் ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் ஹேம்சந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர். சங்க செயலாளர் ராஜூ வரவேற்று பேசினார். முடிவில் தேயிலை வாரிய துணை இயக்குனர் அரிபிரகாஷ் நன்றி கூறி னார்.

<u>தொழில்நுட்ப கருத்தரங்கு</u>

தொடர்ந்து தொழில்நுட்ப கருத்தரங்கு நடந்தது. இதில் தேயிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் ராதாகிருஷ்ணன், உபாசி அறிவியல் மைய தலைமை விஞ்ஞானி டாக்டர் ராமமூர்த்தி, தமிழ்நாடு வேளாண்மை பலக்கலைக்கழக பேராசிரியர் செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள்.

### தொழில்நுட்ப குழு, விவசாயிகள் ஆலோசனை கூட்டம்




தேவகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் வட்டார தொழில்நுட்ப மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் தலைமையில் நடந்தது.

ஆலோசனை கூட்டம்

தேவகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் வட்டார தொழில்நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்த கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் வட்டார தொழில்நுட்ப குழு அமைப்பாளரும், வேளாண்மை உதவி இயக்குனருமான பாஸ்கரமணியன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளது. மாவட்டத்தில் பரவலாக விவசாயிகள் எந்திர முறையில் விதைப்பு செய்துள்ளனர். நேரடி நெல்விதைப்பில் பயிர் முளைக்கும் போது பயிருடன் களைகளும்

முளைத்து வருகின்றன. வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையினால் ஆட்களை வைத்து களை எடுப்பது இயலாத காரியமாக உள்ளது. நேரடி நெல்விதைப்பில் 50 நாட்கள் வரை களைகள் இல்லாமல் பராமரிப்பது அவசியமாகும். சரியான முதல் மேலுரம், தழை சத்து இடுவதன் மூலம் பயிரின் வளர்ச்சி சீராகி களைகளை கட்டுப்படுத்த முடியும். ஈரம் இருக்கும் வயல்களில் அல்லது மழை பெய்தவுடன் முதல் மேலுரமாக மானாவாரியில் 25 கிலோ யூரியாவும், வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ கலந்து ஒருநாள் இரவு வைத்திருந்து இடவேண்டும். தற்போது வேம்பு கலந்த யூரியாவும் கடைகளில் கிடைக்கின்றன.

அவற்றையும் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தலாம். மேலும் விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். 10 கிராம் சிவப்பு பொட்டாஷ் உரத்தை 1 லிட்டர் நீரில் கலந்து வயல்களில் தெளிக்கவேண்டும். உயிர் உரங்கள் திரவ வடிவில் வந்துள்ளன. இதனை ஒரு லிட்டருக்கு, 1 மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

இலவச பயிற்சி

கூட்டத்தில் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி செல்வராஜ் பேசியதாவது:-

விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள வீட்டிலேயே நாட்டுக்கோழிகள் மற்றும் கொட்டில் முறை வெள்ளாடுகள் வளர்த்து வருமானம் ஈட்டலாம். குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் மாதாந்திர இலவச பயிற்சிகள் நடைபெறுகின்றன. அதில் தேவகோட்டை வட்டார விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். ஒரு கிராமத்தில் 20 நபர்கள் குழுவாக சேர்ந்து பயிற்சி அளிக்க கேட்டுக்கொண்டால் அந்த கிராமத்திற்கே வந்து இலவச பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் வேளாண் பொறியியல் துறை உதவி மண்வள பாதுகாப்பு அலுவலர் மதன்குமார், தோட்டக் கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் குமார், விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா, வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்ட தலைவர் மைக்கேல் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சரவணன், பாலமுருகன் ஆகியோர் செய்திருந்தனர்.

## தேனி சுற்றுவட்டார பகுதிகளில் தொடர் மழையால் நெல் அறுவடை பாதிப்பு



தேனி

தேனி சுற்றுவட்டார பகுதிகளில் தொடர் மழை காரணமாக நெல் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நெல் அறுவடை

தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் நிலங்களில் முல்லைப்பெரியாற்று தண்ணீர் மூலம் இருபோகம்

நெல் சாகுபடி நடந்து வருகிறது. தற்போது முதல்போகம் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர் அறுவடை செய்யும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. கம்பம், கூடலூர் பகுதிகளில் 2-ம் போக நெல் நடவு பணிக்காக, நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

அதே நேரத்தில் உப்பார்பட்டி, வீரபாண்டி, பழனிசெட்டிபட்டி பகுதிகளில் அறுவடை பணிகள் கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கியது. கடந்த சில நாட்களாக தேனியில் மழை பெய்து வருவதால் இந்த அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

சாய்ந்த நெற்பயிர்

வீரபாண்டி பகுதிகளில் அறுவடை பணிகள் பாதியில் நிற்கின்றன. மழையால் நெல் வயல்களில் மழைநீர் தேங்கி உள்ளது. சில இடங்களில் நெற்பயிர் சாய்ந்துள்ளது. எந்திரம் மூலம் அறுவடை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், வயல்களில் தண்ணீர் தேங்கி உள்ள நிலையில் அறுவடை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது.

தண்ணீர் தேங்கிய வயல்களில் தண்ணீரை வடிய வைக்க வயலுக்குள் சிறிய வடிவில் வடிகால் எடுத்து, தண்ணீரை வெளியேற்றும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மேலும் சில நாட்கள் மழை நீடித்தால் வயலில் சாய்ந்து விழுந்த நெற்பயிர்கள் முளைத்து விடும் நிலைமை உள்ளது.

## பெரியகுளம் சோத்துப்பாறை அணை நிரம்பி வழிகிறது விவசாயிகள் மகிழ்ச்சி



பெரியகுளம்,

தேனி மாவட்டத்தில் பெய்த மழையின் காரண மாக சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைகள் நிரம்பின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சோத்துப்பாறை அணை

தேனி மாவட்டம், பெரிய குளம் அருகே சோத்துப்பாறை அணை உள்ளது. இந்த அணை இயற்கை எழில் சூழ்ந்த மேற்கு தொடர்ச்சி மலைஅடிவாரத் தில் அமைந்துள்ளது. இந்த அணைக்கு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் இருந்து நீர்வரத்து காணப்படும். இந்த நிலையில் அணை பகுதி மற்றும் மலைப்பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்தது.

இதன் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியது. தொடர்மழை காரணமாக நேற்று அணையின் மொத்த கொள்ளளவை எட்டி உபரி தண்ணீர் நிரம்பி வழிகிறது. அணையின் மொத்த உயரம் 126.28 அடியாகும். அணைக்கு வினாடிக்கு 125 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக் கிறது. அணை முழுக்கொள்ள ளவை எட்டியதால் அணைக்கு வரும் தண்ணீர் முழுவதும் வெளியேறுகிறது.

மஞ்சளாறு அணை

அணையிலிருந்து வெளி யேறும் தண்ணீர் பாப்பையன் பட்டி கண்மாய், தாமரைக் குளம் கண்மாய், பெரியகுளம் கண்மாய் ஆகிய கண்மாய் களுக்கு செல்கிறது. பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு உள்ளிட்ட பகுதியில் உள்ள சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறுகின்றது. இதனால் இந்த பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். இதே போன்று கல்லாறு பகுதியில் பலத்த மழை பெய்ததால் வராகநதி யில் நீர்வரத்து அதிகரித்துள் ளது. இதன் காரணமாக கடந்த சில தினங்களாக வராக நதியில் தேங்கி கிடந்த சாக்கடை நீர் மழைநீரில் அடித்து செல்லப் பட்டது. இதனால் அந்த பகுதிகளை சேர்ந்த பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ள னர்.

இதேபோல் தேவதானப் பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணையும் நிரம்பியது. அணையின் நீர்மட்டம் 56.80 அடியாக உயர்ந்து, உபரிநீர் வெளியேறியது. சோத்துப் பாறை, மஞ்சளாறு அணைகள் நிரம்பியதாலும், வைகை, முல்லைப்பெரியாறு அணை களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

முல்லைப் பெரியாறு

தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட 5 மாவட்டங்களின் நீராதாரமாக திகழும் முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 124.50 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரத்து 410 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது.

## தரமற்ற நாற்றுகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை விதை ஆய்வு துணை இயக்குனர் எச்சரிக்கை




தரமற்ற நாற்றுகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

<u>நாற்றுகள்</u>

திருப்பூர் மாவடத்தில் தாராபுரம் பகுதியில் விவசாயிகளுக்கு காய்கறி, பூ மற்றும் பழச்செடிகளின் நாற்றுகள் பண்ணைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில் குறிப்பாக காய்கறிகளான வெங்காயம், தக்காளி மற்றும் கத்தரி போன்றவற்றின் நாற்றுகள் அதிக அளவில் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த நாற்றுக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நாற்றுப்பண்ணையின் உரிமையாளர்கள் அனைவரும், விதை விற்பனை நிலைய உரிமம் பெற்றுத்தான் விற்பனை செய்ய வேண்டும். உரிமம் பெறாமல் விற்பனை செய்யும் நாற்றுப் பண்ணை உரிமையாளர்கள் மீது விதைகள் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதே போல் விவசாயிகளின் தேவையை பயன்படுத்தி தரமற்ற நாற்றுகளை விற்பனை செய்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தரமான விதை

விதை விற்பனை நிலையங்களில் விவசாயிகள் விதைகளை வாங்கும் போது விதைகள் தரமானதா என்பதை கண்டறிந்து வாங்குவது நல்லது. உரிமம் பெறாத விதை விற்பனை நிலையங்களில் விதைகளை வாங்க கூடாது.

காலாவதியான விதைகளை எந்த காரணத்தை கொண்டும் வாங்கி சாகுபடி செய்யக்கூடாது. விதைகளை வாங்கும் போது விற்பனைக்கான ரசீதை கட்டாயம் கேட்டுப்பெறவேண்டும். வெங்காயம் மற்றும் காய்கறி நாற்றுக்களை விதை உரிமம் பெற்ற நாற்றுப் பண்ணைகளில்தான் வாங்க வேண்டும். பிரித்து வைக்கப்பட்ட பைகளில் உள்ள விதைகளை வாங்க கூடாது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2,739 விவசாயிகளுக்கு ரூ.4½ கோடி கூடுதல் கரும்பு



உடுமலையை அடுத்துள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2,739 கரும்பு விவசாயிகளுக்கு ரூ.4½ கோடி மதிப்பில் கூடுதல் கரும்பு கிரைய தொகையை தமிழக சட்டமன்ற துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் வழங்கினார்.

கரும்பு கிரைய தொகை

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்துள்ள கிருஷ்ணாபுரத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. இங்கு 18,345 கரும்பு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த ஆலைக்கு உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், பல்லடம், பழனி ஆகிய தாலுகாக்களில் இருந்து கோட்ட கரும்பு அலுவலகங்கள் மூலம் கரும்பு ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்த ஆலையில் 2004–2005–ம் ஆண்டு அரவைப்பருவம் மற்றும் 2008–2009–ம் ஆண்டு அரவை பருவம் ஆகிய 2 ஆண்டுகள் (பருவங்கள்) ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு கிரைய தொகை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி 2004–2005–ம் ஆண்டு 21 ஆயிரத்து 975 டன்கள் கரும்பு சப்ளை செய்த 494 விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு கூடுதல் கரும்பு கிரைய தொகையாக ரூ.108 மற்றும் பைசா 43 வீதம் மொத்தம் ரூ.23 லட்சத்து 82 ஆயிரத்து 739–ம் 2008–2009–ம் ஆண்டு 1 லட்சத்து 61 ஆயிரத்து 264 டன்கள் கரும்பு சப்ளை செய்த 2 ஆயிரத்து 245 விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு கூடுதல் கரும்பு கிரைய தொகையாக ரூ.264 மற்றும் பைசா 72 வீதம் மொத்தம் ரூ.4 கோடியே 26 லட்சத்து 89 ஆயிரத்து 777–ம் ஆக மொத்தம் 2 ஆயிரத்து 739 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.4 கோடியே 50 லட்சத்து 72 ஆயிரத்து 516–ஐ கூடுதல் கரும்பு கிரைய தொகையாக வழங்க அரசு உத்தரவிட்டது.

<u>துணை சபாநாயகர் வழங்கினார்</u>

இந்த தொகை வழங்கும் விழா மற்றும் இந்த தொகையை வழங்க உத்தரவிட்ட முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கும் விழா அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை சமுதாய நலக்கூட்டத்தில் நடைபெற்றது. விழாவுக்கு தமிழக சட்டமன்ற துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் தலைமை தாங்கி கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் கரும்பு கிரைய தொகைக்கான காசோலைகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

<u>தீபாவளி பரிசு</u>

தீபாவளி பண்டிகையை விவசாயிகள் மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் தமிழக முதல்–அமைச்சர் தற்போது இந்த கூடுதல் கரும்பு கிரைய தொகையை வழங்கியுள்ளார். இது கரும்பு விவசாயிகளுக்கு தீபாவளி பரிசாகும்.

இந்த ஆலையில் 2015–2016–ம் ஆண்டுக்கான கரும்பு அரவை அடுத்த ஆண்டு (2016) மார்ச் மாதம் முதல் தொடங்கப்பட உள்ளது. கரும்பு அரவைக்கு ஆலையை தயார்படுத்தும் பணிக்காக தொழிலாளர்கள் பிப்ரவரி மாதம் அழைக்கப்பட உள்ளனர். 6 மாத காலம் கரும்பு அரவை நடக்கும். அதன்பின்னர் ஆலையை நவீனப்படுத்தும் பணிகள் நடைபெறும். அதன்மூலம் தொழிலாளர்களுக்கு லே–ஆப் இல்லாமல் தொடர்ந்து 2 ஆண்டுகள் பணியாற்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக முதல்–அமைச்சருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன் பேசினார்.

விழாவில் சி.மகேந்திரன் எம்.பி, மடத்துக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பயிரிடுவோர் சங்க பொதுச்செயலாளருமான சி.சண்முகவேலு, சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர் ஆர்.இந்துமதி, நிர்வாகக்குழு தலைவர் காங்கயம்பாளையம் சின்னப்பன் என்கிற எஸ்.பழனிச்சாமி, துணைத்தலைவர் என்.முத்துராமலிங்கம், நிர்வாகக்குழு இயக்குனர் டபிள்யூ.என்.கே.ஈஸ்வரன், மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் நா.அண்ணாதுரை ஆகியோர் பேசினார்கள். ஆலையின் நிர்வாகக்குழு இயக்குனர்கள், தொழிலாளர் நல அதிகாரி எஸ்.நவநீதன், அலுவலக மேலாளர் கோவிந்தராஜ், துணை தலைமை ரசாயன அதிகாரி

(பொறுப்பு) கமல் பிரசாத், துணை தலைமை பொறியாளர் (பொறுப்பு) ராஜ்குமார், கரும்பு விவசாயிகள், ஊழியர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்

**கனமழை: ஊட்டியில் மண்சரிவு**



நாகர்கோவில் : குமரியில் பெய்து வரும் அடைமழைக்கு நேற்று ஒரே நாளில் 25 வீடுகள் இடிந்தன. ஊட்டியில் மலைசரிவு ஏற்பட்டு தண்டவாளத்தில் மண்விழுந்ததால் மலை ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது. குமரி மாவட்டம் முழுவதும் விடிய விடிய கனமழை பெய்து வருகிறது. இதனால் தென்னந்தோப்புகள், வயல் வெளிகள், வாழைத்தோட்டங்களை மழை நீர் சூழ்ந்துள்ளது. குழித்துறை தாமிரபரணி ஆற்றில் வெள்ள பெருக்கு காரணமாக, கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். திற்பரப்பு அருவியில் அதிக அளவு தண்ணீர்

கொட்டுகிறது. இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று ஒரே நாளில் 25 வீடுகள் இடிந்து விழுந்தன.

ஊட்டியில் மண்சரிவு: நீலகிரி மாவட்டத்தில் 3 நாட்களாக மழை கொட்டித்தீர்த்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு பெய்த மழை காரணமாக, மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு செல்லும் மலை ரயில் பாதையில் 2 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு தண்டவாளம் மண்ணால் மூடப்பட்டது. இதை அறியாமல் நேற்று காலை மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளோடு புறப்பட்ட மலை ரயில், கல்லார் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து ரயில்வே ஊழியர்கள் வந்து மண் சரிவை சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் உடனடியாக அகற்ற முடியவில்லை. இதனால் ே◌நற்று ஒருநாள் மட்டும் மலைரயில் போக்குவரத்து ரத்து செய்யபடுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்தது. இதனால், கல்லாரில் இருந்து சுற்றுலா பயணிகள் பேருந்து மூலம் ஊட்டிக்கு சென்றனர்.

**சவுதியில் ஆறு கால்களுடன் பிறந்த அதிசய ஆட்டுக்குட்டி: மக்கள் வியப்புடன் கண்டுகளிப்பு**



ரியாத்: சவுதி அரேபியாவின் கமிஸ் முஷைட் நகரில் உள்ள ஒரு பண்ணையில் ஆறு கால்களுடன் பிறந்துள்ள ஆட்டுக்குட்டியை அப்பகுதி மக்கள் அச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். சயீத் அல் கட்டானி என்பவருக்கு சொந்தமான அந்த பண்ணையில் சமீபத்தில் ஒரு செம்மறியாடு குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு குட்டி ஆறு கால்களுடன் இருப்பதாக தகவல்கள் வெளியானதும், கமிஸ் முஷைட் நகர மக்களுடன் அக்கம்பக்கத்து நகரங்களில் உள்ளவர்களும் அந்த அதிசய ஆட்டுக்குட்டியை வியப்புடன் பார்த்துச் சென்ற வண்ணம் உள்ளனர். அந்த பண்ணை உரிமையாளர் இதுவரை இதுபோன்ற சம்பவங்களை கண்டதில்லை இதுவே முதல்முறை என்று அந்த உரிமையாளர் கூறியுள்ளார்.

**தொடர் கனமழை காரணமாக சென்னை விமானங்கள் பெங்களூர் திரும்பின**




சென்னை : சென்னையில் பெய்து வரும் கனமழையால் விமான நிலையத்தின் ஓடு பாதையில் குளம் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் விமான போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து 84 பயணிகளுடன் நேற்று அதிகாலை 2.30 மணிக்கு · லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் சென்னை வந்தது. அப்போது சென்னையில் பலத்த மழை பெய்து கொண்டு இருந்ததால், விமானம் தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்தது. நீண்ட நேரம் ஆகியும், மழை நிற்கவில்லை. இதனால், விமான நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருந்த அதிகாரிகள், விமானத்தை பெங்களூருக்கு திருப்பி அனுப்பினர். இதைப்போல் அதிகாலை 4 மணிக்கு தோகாவில் இருந்து 294 பயணிகளுடன் கத்தார் ஏர்லைன்ஸ் விமானம் சென்னை சர்வதேச விமான நிலையம் வந்தது. அந்த விமானமும் தரையிறங்க முடியாமல் பெங்களூருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.தொடர்ந்து சென்னையில் இருந்து கொழும்பு, துபாய், சிங்கப்பூர் மற்றும் உள்நாட்டு விமானங்களான அந்தமான், புனே, விசாகப்பட்டினம், மும்பை, டெல்லி உள்பட பகுதிகளுக்கு செல்ல இருந்த 10க்கு மேற்பட்ட விமானங்கள் பலத்த மழை காரணமாக புறப்படுவதில் பல மணி நேரம் தாமதம் ஏற்பட்டது. காலை 6.30 மணிக்கு மழை ஓய்ந்த பின், இந்த விமானங்கள்

ஒன்றன்பின் ஒன்றாக காலதாமதமாக புறப்பட்டு சென்றன. இதை தொடர்ந்து, பெங்களுருக்கு திருப்பி அனுப்பிய விமானங்கள் காலை 7 மணிக்கு மேல் சென்னைக்கு திரும்பி வந்தன.

இந்நிலையில், காலை 7 மணிக்கு சென்னையில் இருந்து கோயம்புத்தூர் செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் 158 பயணிகளுடன் புறப்பட்டு சென்றது. ஆனால், கோவையில் பலத்த மழை பெய்ததால் விமானம் அங்கு தரையிரங்க முடியாமல், காலை 9 மணிக்கு மீண்டும் சென்னைக்கு திரும்பியது. இதனால் சென்னை விமான நிலையத்தில் விமான போக்குவரத்து பெரிய அளவில் பாதிக்கப்பட்டு பயணிகள் கடும் அவதியடைந்தனர்.

**அரசு விற்பனை அங்காடிகளில் முதல் நாள் 26,975 கிலோ துவரம் பருப்பு விற்பனை**



சென்னை : அரசு விற்பனை அங்காடிகள் மூலம் முதல் நாளில் மட்டும் 27,975 கிலோ துவரம் பருப்பு விற்பனையானது. தமிழகத்தில் கடந்த மாதம் துவரம் பருப்பு விலை திடீரென விலை உயர்ந்தது. ஒரு கிலோ பருப்பு விலை ரூ.210 முதல் ரூ.250 வரை உயர்ந்தது. விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து 5000 மெட்ரிக் டன்

முழு துவரை இறக்குமதி செய்தது. இதில் தமிழக அரசுக்கு 500 மெட்ரிக் டன் வழங்கப்பட்டது. மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்ட துவரம் பருப்பு, தமிழக அரசு கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் அரசு பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் நவம்பர் 1ம் தேதி முதல் விற்பனை செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

அதன்படி, சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய 4 நகரங்களில் மட்டும் 91 அரசு விற்பனை அங்காடிகளில் 1 கிலோ துவரம் பருப்பு 110 ரூபாய் என்ற விலையில் நேற்று முன்தினம் முதல் விற்பனை தொடங்கியுள்ளது. அரசு விற்பனை அங்காடிகளில் முதல்நாளான நேற்று முன்தினம் 27,975 கிலோ பருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 15,628 கிலோ, கோவை 2,843 கிலோ, திருச்சி 5,816 கிலோ, மதுரை 2,688 கிலோ துவரம் பருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவு துறை அதிகாரி தெரிவித்தார். அரசு சார்பில் அனைத்து ரேஷன் கடைகளிலும் முதல் தர துவரம் பருப்பு ரூ.110க்கு விற்பனை செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**மத்திய அரசின் நடவடிக்கையால் துவரம் பருப்பு கிலோவுக்கு 35 சரிவு**




சென்னை: பருப்பு விலை வரலாறு காணாத அளவு உயர்ந்ததை தொடர்ந்து, மத்திய அரசு வெளிநாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்கிறது. தான்சானியா, கென்யா, மாளவியா போன்ற ஆப்ரிக்க நாடுகளில் இருந்து அளவுக்கு அதிகமான தான்சானியா பருப்பு வந்து கொண்டிருக்கிறது. இதனால், 2 வாரமாக பருப்பு விலை குறைய ொதாடங்கியுள்ளது. கடந்த வாரம் 190க்கு விற்ற துவரம் பருப்பு 180 ஆகவும், துவரம் பருப்பு (பாக்கெட்) 225லிருந்து 190 ஆகவும் விலை குறைந்துள்ளது. அதாவது, கிலோவுக்கு 35 வரை குறைந்துள்ளது.

தான்சானியா துவரம் பருப்பு 150லிருந்து 130, தான்சானியா துவரம் பருப்பு(பாக்கெட்) 160லிருந்து 140 ஆகவும் குறைந்துள்ளது. உளுந்தம் பருப்பு 180லிருந்து 160, பர்மா உளுந்தம் பருப்பு 160லிருந்து 150, பாசிப்பருப்பு 140லிருந்து 120, கடலைப்பருப்பு 80லிருந்து 75 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார். மத்திய அரசு நடவடிக்கையால் விலை குறைந்துள்ளது. வரும் மாதங்களில் மேலும் கிலோவுக்கு 30 முதல் 40 வரை குறைய வாய்ப்புள்ளது. வெளிநாடுகளில் இருந்து அளவுக்கு அதிகமாக பருப்பு

இறக்குமதியாவதால் தீபாவளிக்கு பிறகு தான்சானியா துவரம் பருப்பு 110க்கு கீழ் குறைய வாய்ப்புள்ளது எனவும் அவர் கூறினார்.

**முட்டை விலை 348 காசுகளாக நிர்ணயம்**




நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் உயர்ந்து, 348 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் முட்டை விலையில் 3 காசுகள் உயர்த்தி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலையை 348 காசாக நிர்ணயம் செய்துள்ளது.

வடமாநிலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல், ஒரு கிலோ முட்டைக்கோழி 54, கறிக்கோழி 67 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்) ஐதராபாத்- 345, விஜயவாடா- 342, மும்பை- 380, மைசூர்- 363, பெங்களூரு- 360, கொல்கத்தா- 368, டெல்லி- 380.

**1 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு தீபாவளிக்குள் தண்ணீர் திறப்பு? விவசாயிகள் எதிர்பார்ப்பு**

மதுரை, : அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் தீபாவளிக்குள் பெரியாறு ஒருபோக ஆயக்கட்டு 1 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாசனத்துக்கு 48 நாள் தாமதம் ஏற்பட்டாலும் தண்ணீர் திறக்கப்படும் சூழல் எழுந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை நீடித்து அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று மாலை நிலவரப்படி பெரியாறு அணை நீர்மட்டம் 125 அடியை தாண்டியது. வைகை அணை 49 அடியை எட்டியது. மதுரை மாவட்டத்தில் பெரியாறு அணை பாசன ஒருபோக ஆயக்கட்டு மேலூர் பகுதி மற்றும் திருமங்கலம் கால்வாய் பகுதிகளில் மொத்தம் 1 லட்சம் ஏக்கர் உள்ளது. இவற்றின் பாசனத்துக்கு செப்டம்பர் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். 48 நாட்கள் கடந்தும் இன்னும் ஒருபோக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. 1 லட்சம் ஏக்கர் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க பெரியாறு அணையில் 6 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் இருக்க வேண்டும். தற்போது 5 ஆயிரத்து 300 மில்லியன் கன அடி உள்ளது. பெரியாறு அணைக்கு 4,410 கன அடி நீரும், வைகைக்கு 2,037 கன அடி நீரும் வந்து கொண்டு இருக்கிறது. அணை நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால் ஓரிரு நாளில் 6 ஆயிரம் மில்லியன் கன அடியை தாண்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே ஒரு போக பாசனத்துக்கு தீபாவளிக்கு முன் தண்ணீர் திறக்க வாய்ப்பு கனிந்துள்ளது என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். எப்போது திறக்கப்படும்? என விவசாயிகள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

**பசுந்தேயிலை வார விலை நிர்ணயம் தேயிலை வாரியம் சுற்றறிக்கை**

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள்கள் குன்னூரிலுள்ள அரசு கூட்டுறவு ஏல மையம், சிடிடிஏ ஏல மையம் மட்டுமல்லாமல் கோவை, கொச்சின் ஏல மையங்கள் மூலம்

தேயிலை தூள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனிடையே பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென விவசாயிகள் சார்பில், நீதி மன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தேயிலை விலை கண்காணிப்பு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி மாதம் மற்றும் வாரம் தேயிலை தூள் விற்பனை குறித்து கண்காணித்து பசுந்தேயிலைக்கு உண்டான விலையை நிர்ணயம் செய்து வருகிறது. இந்த கமிட்டிக்கு எதிராக உற்பத்தியாளர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் இடைக்கால தடை பெறப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தவாரம் தேயிலை வாரியத்தின் சார்பில் வார விலையாக மாவட்டத்திலுள்ள 6 தாலுகா அளவில் விலை நிர்ணயம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி குன்னூர் பகுதியில் பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.11.72 பைசா, கோத்தகிரி 12.81 பைசா, கூடலூர் ரூ.11.82, குந்தா ரூ.9.41, பந்தலூர் ரூ.11.33, ஊட்டி ரூ.10.78, விலை வழங்க வேண்டுமென அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

**தி இந்து**

**தமிழால் இணைவோம்**

## குறைந்த விலை துவரம் பருப்பு ஒரே நாளில் 27 டன் விற்பனை: போதிய இருப்பு உள்ளதாக அதிகாரி தகவல்



தமிழகம் முழுவதும் அரசின் குறைந்த விலை இறக்குமதி துவரம் பருப்பு விற்பனை திட்டத்தின் கீழ், திட்டம் தொடங்கப்பட்ட முதல் நாளில் மட்டும் 91 விற்பனை நிலையங்களில் 27 டன் பருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் துவரம் பருப்பு விலை கடந்த மாதம் ஆயுதபூஜை யின் போது, வரலாறு காணாத வகையில் ரூ.225-ஐ எட்டியது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு தமிழகத்துக்கு வழங்கிய 500 டன் முழு பருப்பை உடைத்து, மாநிலம் முழுவதும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நடத்தப்படும் தேர்வு செய்யப்பட்ட 91 விற்பனை நிலை யங்களில் கிலோ ரூ.110-க்கும், அரை கிலோ ரூ.55-க்கும் விற்பனை செய்யும் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.அன்று அனைத்து விற்பனை நிலையங்களிலும், பருப்பு வாங்க அதிக அளவில் மக்கள் வந்திருந்தனர். ஒரு நபருக்கு 1 கிலோ மட்டுமே பருப்பு விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 91 விற்பனை நிலையங்களும் சேர்த்து 27 டன் பருப்பு விற்பனை செய்யப்பட்டது.

இது தொடர்பாக கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது: முதல் நாளில் மட்டும் சென்னையில் உள்ள 56 விற்பனை நிலையங்களில் 15 ஆயிரத்து 628 கிலோ, கோயம்புத்தூரில் 10 கடைகளில் 2 ஆயிரத்து 843 கிலோ, திருச்சியில் 14 கடைகளில் 5 ஆயிரத்து 816 கிலோ, மதுரையில் 11 கடைகளில் 2 ஆயிரத்து 688 கிலோ என மொத்தம் 91 கடைகளில் 26 ஆயிரத்து 975 கிலோ (27 டன்) பருப்பு விற்பனை செய்யப்பட்டது.

சென்னையில் ஒருசில கடைகளில் இருப்பு குறைந்ததைத் தொடர்ந்து, குடோன்களில் இருந்து உடனே கொண்டு சென்று விநியோகம் செய்யப்பட்டது. குறைந்தவிலை பருப்பு வியாபாரிகள் கைக்கு செல்வதை தடுக்கவும், அனைவருக்கும் சென்று சேரும் விதமாகவும், ஒரு நபருக்கு

ஒரு கிலோ மட்டும் வழங்கப்படுகிறது. அனைத்து கடைகளுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பருத்தி உற்பத்தியில் இந்தியா முதலிடம் பிடிக்க வாய்ப்பு



170கிலோ பருத்தி கொண்ட 400 லட்சம் பேல்களை உற்பத்தி செய்து 2015-16-ம் ஆண்டில் பருத்தி உற்பத்தியில் இந்தியா முதலிடம் பிடிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.மற்ற பருத்தி உற்பத்தி நாடுகளில் இந்த ஆண்டு உற்பத்தி எதிர்பார்த்ததை விட குறைவாக இருக்கும் என்றே வர்த்தக கணிப்புகள் கூறுகின்றன. எனவே அதிக பருத்தி உற்பத்தி நாடுகளில் சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடம் பிடிக்கும் என்று தென்னிந்திய மில்ஸ் அசோசியேஷன் தெரிவித்துள்ளது. உலக பருத்தி உற்பத்தி 2015-16-ல் 23.68 மில்லியன் டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் இது 8.6% குறைவு என்று கூறப்படுகிறது. அமெரிக்கா, மற்றும் சீனாவில் பருத்தி உற்பத்தி முறையே 17.7% மற்றும் 13.3% குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க வேளாண் துறையின் கணிப்பின் படி இந்தியாவில் பருத்தி உற்பத்தி 2015-16-ல் 370 லட்சம் பேல்களாகும். ஆனால் தற்போது 400 லட்சம் பேல்களை இந்தியா உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பரவலாக மழை: 125 அடி நீர்மட்டத்தை எட்டிய பெரியாறு அணை

கம்பம், நவ.3–

கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக பெரியாறு அணை நீர்மட்டம் 125 அடியை எட்டியுள்ளது. நேற்று அணைக்கு 4000கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. மலைப்பகுதியில் மழை குறைந்ததால் நீர்வரத்து 1660 கனஅடியாக குறைந்துவிட்டது. அணையில் இருந்து 511 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

வைகைஅணை நீர்மட்டமும் படிப்படியாக உயர்ந்து 48.82 கனஅடியாக உள்ளது. நேற்று 2037 கனஅடி தண்ணீர் வந்தது. இன்று 956 கனஅடியாக குறைந்துவிட்டது. 60 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

மஞ்சளாறு அணை நிரம்பி விட்டதால் (நீர்மட்டம் 58.28) வருகிற 294 கனஅடி தண்ணீரும் அப்படியே திறந்துவிடப்படுகிறது. இதுபோன்று சோத்துப்பாறை அணையும் நிரம்பி விட்டதால் அணைக்கு வருகிற 37 கனஅடி தண்ணீரும் அப்படியே வெளியேற்றப்படுகிறது.

பெரியாறு, தேக்கடி பகுதியில் மிதமான மழை பெய்தது. மஞ்சளாறு அணை பகுதியில் 1 மி.மீ பதிவாகியுள்ளது. மற்ற இடங்களில் மழை இல்லை. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

பாசனத்துக்காக ஈச்சம்பாடி–கோமுகி அணைகள் நாளை திறப்பு: ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, நவ. 3–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

தர்மபுரி மாவட்டம், ஈச்சம்பாடி அணையின் வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அதனை ஏற்று, ஈச்சம்பாடி அணையின் வலது மற்றும் இடதுபுற வாய்க்கால்களில் நாளை முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளேன்.

இதனால், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள 6,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகி அணையிலிருந்து பழைய மற்றும் புதிய பாசனப்பரப்புகளுக்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அந்த வேண்டுகோளினை ஏற்று, கோமுகி அணையிலிருந்து விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழைய மற்றும் புதிய பாசனப் பரப்புகளுக்கு நாளை முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 10,860 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**கூட்டுறவு கடைகளில் கிலோ ரூ.110-க்கு விற்க மேலும் 500 டன் வெளிநாட்டு துவரம் பருப்பு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு**



சென்னை, நவ.3-

கூட்டுறவு கடைகளில் கிலோ ரூ.110-க்கு விற்க மேலும் 500 டன் வெளிநாட்டு துவரம் பருப்பு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த துவரம் பருப்பு தொடர்ந்து விற்பனை செய்யப்படும்.

5 ஆண்டுகளுக்கு முன்பு துவரம் பருப்பு கிலோ ரூ.52-க்கு விற்கப்பட்டது.

பருவ மழை பொய்த்த காரணமாக துவரம் பருப்பு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டதால், கடும் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில் விலை கிலோ ரூ.200-க்கு மேல் உயர்ந்தது. இதனால் துவரம் பருப்பு பதுக்கலை தடுக்க நாடு முழுவதும் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகவும்,

வெளிநாட்டு பருப்பு இறக்குமதி காரணமாகவும், ஏறிய வேகத்திலேயே இறங்கியது. என்றாலும், வெளி மார்க்கெட்டில் நேற்று துவரம் பருப்பு விலை கிலோ ரூ.180 ஆக இருந்தது.

துவரம் பருப்பு விலை உயர்வை சமாளிக்க வெளிநாடுகளில் இருந்து துவரம் பருப்பு இறக்குமதி செய்ய மத்திய அரசாங்கம் கொள்கை அளவில் முடிவெடுத்தது. முதற்கட்டமாக, 5 ஆயிரம் டன் துவரம் பருப்பு இறக்குமதி செய்யப்பட்டது. கப்பல்களில் கொண்டு வரப்பட்ட துவரம் பருப்பில் 2500 டன் மும்பை துறைமுகத்திலும், 2500 டன் சென்னை துறைமுகத்திலும் இறக்கப்பட்டது.

சென்னை துறைமுகத்தில் இருந்த 2500 டன் துவரம் பருப்பில், தமிழ்நாட்டுக்கு 500 டன் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டதற்கு இணங்க 500 டன் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது. ஆப்பிரிக்க நாட்டில் இருந்து வந்த இந்த 500 டன் துவரையை சென்னையில் உள்ள 9 தனியார் ஆலைகளில் இரவு, பகலாக அரைக்கும் பணி நடந்தது.

கடந்த 1-ந் தேதி முதல் கூட்டுறவு கடைகளில் துவரம் பருப்பு விற்பனை தொடங்கியது. முதல் நாளான 1-ந் தேதி, சென்னையில் உள்ள அமுதம் மற்றும் கூட்டுறவு கடைகளில் 15 ஆயிரத்து 628 கிலோ துவரம் பருப்பு விற்பனையானது. கோயம்புத்தூரில் 2 ஆயிரத்து 843 கிலோவும், திருச்சியில் 5 ஆயிரத்து 816 கிலோவும், மதுரையில் 2 ஆயிரத்து 688 கிலோவும், ஆக மொத்தம் 26 ஆயிரத்து 975 கிலோ துவரம் பருப்பு விற்பனையானது.

தேவையான அளவு எங்களிடம் துவரம் பருப்பு ஸ்டாக் இருக்கிறது.

தீபாவளி வரை மட்டுமல்ல, தொடர்ந்து பொதுமக்களின் தேவைக்கேற்ப அரசின் மறு உத்தரவு வரும் வரை கூட்டுறவு கடைகளில் கிலோ ரூ.110-க்கு பொதுமக்களுக்கு துவரம் பருப்பு விற்பனை செய்ய வேண்டும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.இந்தநிலையில், சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள துவரம் பருப்பில் மேலும் 500 டன் துவரம் பருப்பு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று, மேலும் 500 டன் துவரம் பருப்பு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொகையை மத்திய அரசாங்கத்துக்கு தமிழக அரசு செலுத்தி விட்டது. அடுத்த சில தினங்களில் இந்த துவரம் பருப்பையும் துறைமுகத்தில் இருந்து தமிழக அரசு எடுத்து, அதை ஆலைகளில் அரைத்து பொதுமக்களுக்கு விநியோகிக்க உள்ளது.இதுதவிர, தமிழ்நாட்டில் உள்ள ரேஷன் கடைகளில் ஒவ்வொரு கார்டுக்கும் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30-க்கும், ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ரூ.30-க்கும் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. இதற்காக மாதந்தோறும் 14 ஆயிரம் டன் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு விநியோகிக்கப்படுகிறது. அதேபோல், 7 ஆயிரம் டன் உளுந்தம் பருப்பு இந்தியாவில் பிற மாநிலங்களில் வாங்கப்படுகிறது.

இந்தியாவில் இந்த ஆண்டு தொடர்ந்து துவரம் பருப்பு உள்ளிட்ட தானிய வகைகளின் தேவை பற்றாக்குறையாகத்தான் இருக்கும். மக்களின் தேவை 2 கோடியே 71 லட்சம் டன்னாக இருக்கும் நிலையில், இந்த ஆண்டு விளைச்சல் ஒரு கோடியே 70 லட்சமாகத்தான் இருக்கும். எனவே, ஒரு கோடி டன்னுக்கு மேல் துவரம் பருப்பு மற்றும் தானிய வகைகளை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு உள்ளது. இந்த நிலையில், தமிழகத்துக்கு தேவையான துவரம் பருப்பு முழுவதையும்

ஒதுக்கீடு செய்ய மத்திய அரசாங்கத்தை உணவுத்துறை வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குமரி: ஆறுகளில் வெள்ளப்பெருக்கு - 37 ஹெக்டேர் நெற்பயிர்கள் சேதம்

நாகர்கோவில், நவ. 3–

குமரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையினால் மாவட்டம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது.

மயிலாடி, கொட்டாரம், நாகர்கோவில், சுருளோடு, கன்னிமார், ஆரல்வாய் மொழி, ஆணைக்கிடங்கு, இரணியல், பூதப்பாண்டி பகுதிகளிலும் நேற்றிரவு மழை பெய்தது. மயிலாடியில் அதிகபட்சமாக 50.2 மி.மீ. மழை பதிவானது.

மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் கொட்டி தீர்த்து வரும் கனமழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து கணிசமாக உயர்ந்து உள்ளது. இதனால் பேச்சிப்பாறை அணை வேகமாக நிரம்பி வருகிறது. ஓரிரு நாட்களில் அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 44.50 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 977 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 74.68 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,056 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து உபரிநீராக 1,002 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றாறு–1 அணையின் நீர்மட்டம் 16.33 அடியாக உள்ளது. அணைக்கு 470 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து உபரி நீராக 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதை அடுத்து கோதையாறு, பரளியாறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

குழித்துறை ஆறு, சுசீந்திரம் பழையாறு, வள்ளியாறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. சானல்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், தாழ்வான பகுதிகளில் உள்ள நெற்பயிர்களை வெள்ளம் சூழ்ந்தது. பூதப்பாண்டி அருகே அறுவடைக்கு தயாரான 2 ஹெக்டேர் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளது. பூதப்பாண்டி, முஞ்சிறை, குருந்தன்கோடு, வடசேரி பகுதிகளில் நடவு செய்யப்பட்ட 35 ஹெக்டேர் பரப்பளவிலான நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மழைக்கு பாசன குளங்களும் நிரம்பி வருகிறது. 1,108 குளங்கள் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வருகிறது. புத்தேரி நெடுங்குளம், பிராந்தனேரி குளம், பறக்கை குளம் உள்பட 15 குளங்கள் உடைந்துள்ளது. இதை பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன் தலைமையிலான அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு சீரமைப்பு பணியை மேற்கொண்டுள்ளனர். மணல் மூடைகள் அடுக்கி உடைப்புகள் சரி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழியும் குளங்கள் சேதமடையாமல் இருக்கவும் முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முட்டம் சானல், பி.பி. சானல்களில் பல்வேறு இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் சுமார் 100–க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளது. வீடுகளை அந்தந்த பகுதி தாசில்தார்கள் நேரில் சென்று பார்வையிட்டனர். அந்த பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

நாகர்கோவில் அருகே ஆசாரிபள்ளம் பகுதியில் சானலில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் குண்டல்பத்து பகுதியில் உள்ள

தென்னந்தோப்புகளுக்குள் வெள்ளம் புகுந்தது. அந்த பகுதியில் உள்ள 75–க்கும் மேற்பட்ட குடியிருப்புகளையும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இதனால் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் பரிதவிப்புக்கிற்கு ஆளாகி உள்ளனர். இதேபோல் மாவட்டம் முழுவதும் தாழ்வான பகுதிகளில் உள்ள சுமார் 200–க்கும் மேற்பட்ட வீடுகளை மழை நீர் சூழ்ந்துள்ளது.